05 படித்தலும் புரிதலும்

தேவை - முக்கியத்துவம்

குர்ஆனின் பொருளைப் புரிந்துகொள்வதற்காக நீங்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் கவனம் செலுத்தினாலொழிய, உங்களின் படைப்பாளனான இறைவன் உங்களிடம் என்ன கூற வருகிறான் என்பதை அறிந்தாலொழிய, அதன் முழுமையான அருட்கொடைகளையும் பொக்கிஷங்களையும் நீங்கள் பெற முடியாது.

குர்ஆனைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கும் அதன் அருட்கொடைகளில் பங்கு கிடைக்கும் என்று நாம் முன்னர் சொல்லிய கூற்றுக்கு மறுப்பாக இதனைக் கருதிட வேண்டாம். மிகப் பெரும்பான்மையான முஸ்லிம்கள் அரபு மொழி தெரியாத வர்களாக இருக்கின்றனர் என்பதும், அவர்களது மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட குர்ஆனின் பிரதி அவர்களிடம் இல்லை என்பதும் உண்மையே. ஆனால், அவர்களும் குர்ஆனைப் பக்தியுடனும், மரியாதையுடனும், பிரியத்துடனும் ஓதிவந்தால், அதனுடைய செல்வங்களுள் சிலவற்றைப் பகிர்ந்துகொள்ளத் தவறமாட்டார்கள். உங்களது அன்பிற்குப் பாத்திரமான ஒருவனுடன் நீங்கள் நட்பு பாராட்டுகின்றபோது, அவன் பேசுகின்ற மொழி உங்களுக்குத் தெரியாவிட்டாலும்கூட, அவனுடனான உங்களது உறவு ஆழமானதாகவே இருக்கும். ஆனாலும், அவன் என்ன கூறுகின்றான் என்பதை நீங்கள் புரிந்துகொள்கின்றபோது, அவனுடனான உங்கள் உறவு மிகவும் வலுப்பெறும். அதே நேரத்தில், வெறும் பொருளை மட்டும் புரிந்துகொள்வதால் எந்தப் பயனும் இல்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதடுகளிலிருந்து வந்த குர்ஆன் வசனங் களைக் கேட்ட பலர் அதனைப் புரிந்துகொண்டனர். எனினும் அவர்கள் வழிதவறிப் போயினர். அரபு மொழியைத் தாய்மொழி

யாகக் கொண்டிருந்த லட்சக்கணக்கானோர் குர்ஆனை நன்கு புரிந்துகொண்டனர். ஆனால், அது அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பல அறிஞர் குழுவினரும், முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர்களும் தங்கள் வாழ்நாள் முழுவதும் குர்ஆனை ஓதியும் ஆய்வு செய்தும் வந்துள்ளனர். அவர்களின் அறிவுத் திறனைக் குறைத்து மதிப்பிட இயலாது. எனினும் அது அவர்களைத் தொடவில்லை.

இருந்தபோதிலும், குர்ஆனைப் புரிந்துகொள்ள நீங்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. குர்ஆன் ஒரு நல்வழிகாட்டியாகவும், நினைவூட்டலாகவும், எச்சரிக்கையாகவும், பிணி நிவாரணியாகவும் வந்துள்ளது. அது வெறுமனே நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் புனிதச் சடங்கிற்காகவும் அருளப்படவில்லை. மாறாக, அது உங்களது மனப்போக்கை தீவிரமாக மாற்றி ஒரு புது வாழ்க்கைக்கு உங்களை அழைத்துச் செல்ல வந்துள்ளது.

அதனைப் புரிந்துகொள்வது மட்டும் புது வாழ்க்கைக்கு நிச்சயமான ஒரு உத்தரவாதத்தை அளிக்காது. ஆனால், குர்ஆனின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றாவிட்டால், மனித சமுதாயத்தை அதன் பாதைக்கு அழைக்காவிட்டால் அதன் நோக்கம் நிறைவேறாது.

தனிப்பட்ட முறையில் ஓதுதல்

குர்ஆனைப் புரிந்துகொள்ளவும், அதன் பொருள் பற்றி சிந்திக்கவும் நம்மை நாமே ஏன் அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்? குர்ஆனை நாம் ஓதினாலோ அதனை நன்கு ஓதத் தெரிந்த ஒருவர் கூறும் விளக்கத்தைக் கேட்டாலோ போதாதா? இதுவும் தேவைதான். ஆனால் இது மட்டும் போதாது.

மிக முக்கியமான, தீர்க்கமான ஒரு காரணத்திற்காக, குர்ஆன் என்ன கூற வருகிறது என்பதைக் கண்டுணர்ந்து அதனை உள்வாங்கிட முயல வேண்டும். குர்ஆன் வெறுமனே ஒரு அறிவுக் களஞ்சியமல்ல. அல்லது செய்ய வேண்டியவற்றையோ,

செய்யக்கூடாதவற்றையோ பட்டியலிடுகின்ற ஒரு நூலும் அல்ல. அது இறைவனைப் பற்றியோ, அவன் உங்களுக்கு வழங்கியுள்ள செய்தி பற்றியோ மட்டும் அறிவித்திடவில்லை. அது உங்களுடைய ஆன்மாவைப் பற்றி இழுத்து உங்களது புது வாழ்க்கைக்கும், அவனுடனான நீடித்த உறவிற்கும் வழிகோலுகிறது. எனவே, அது உங்களுடைய நம்பிக்கையையும் உறுதியையும் அதிகமாக்கி வலுப்படுத்த வேண்டும். உங்களுடைய நடத்தையைச் சீராக்க வேண்டும். தொடர்ந்து உங்களுக்கு ஊக்கமளித்து உங்களை மிகப் பெரிய உயரங்களுக்கு இட்டுச் செல்ல வேண்டும். குர்ஆனை நீங்கள் தனிப்பட்ட முறையில் ஓதி அதன் பொருளை உணர்ந்து, அது பற்றிச் சிந்தனை செய்தாலே இது சாத்தியமாகும். அதன் செய்திகளைப் பற்றிச் சிந்திக்காமல், உங்களது இதயங்களும், எண்ணங்களும், நடத்தைகளும் அவற்றிற்குப் பதிலளிக்க முடியாது. அது பற்றிச் சிந்தனையிலும் பிரதிபலிப்பிலும் நீங்கள் மூழ்காவிட்டால், அவற்றை உங்களால் உள்வாங்கிக் கொள்ள இயலாது. உங்களது வாழ்க்கையில் எந்தவிதமான தாக்கத்தையும் அது ஏற்படுத்தாது. சற்று சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியதில்லை, சிந்திக்க வேண்டியதில்லை என்றால் பின் எதற்காகக் குர்ஆனைத் தர்த்தீலுடன் ஓத வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது? நீங்கள் ஓதுகின்ற செய்தியை அறிந்துகொள்ளாவிட்டால், பின் எப்படி அது வலியுறுத்திக் கூறுகின்ற மனம், உடல், மொழி சார்ந்த பதில்களை அளித்திட முடியும்? ஏன் நீங்கள் குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓத வேண்டும்?

கற்பதற்கு எதிரான வாதங்கள்

நன்கு கற்றறிந்த ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டல் இல்லாது, அல்லது கற்பதற்குத் தேவையான கருவிகள் இல்லாது, குர்ஆனைச் சுயமாக ஓதிப் புரிந்துகொள்ள முயலும் ஒருவருக்கு இறைவனின் அவ்வேதம் தவறான வழிகாட்டலை வழங்கிடலாம், அல்லது அவரை வழிகேட்டிற்கும் இட்டுச் செல்லலாம். குறிப்பாக நீங்கள் உங்களது வரையறைகளையோ, குறிக்கோள்களையோ தெளிவாக அறிந்துகொள்ளாதபோது அத்தகைய ஆபத்துகள் நிகழலாம். ஆனால் நீங்கள் புரிந்து

கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளாவிட்டால் உங்களுக்கும் உங்களுடைய உம்மத்துகளுக்கும் ஏற்படுகின்ற இழப்பு மிகப் பெரிய அளவில் இருக்கும். சுயமாக ஓதுகின்றபோது நீங்கள் எதிர்கொள்ளவிருக்கின்ற அத்தகைய ஆபத்துகளை சில பொருத்தமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள் வதன் மூலம் தவிர்த்திட முடியும். நீங்கள் ஒருபோதும் உங்கள் வரையறைகளையோ குறிக்கோள்களையோ தாண்டிச் செல்ல முயலாதீர்கள். அத்தகைய கற்றலினால் ஏற்படக்கூடிய இழப்பைச் சரி செய்ய முடியாது.

நீங்கள் சுயமாக குர்ஆனின் பொருளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யாதீர்கள். அப்படிச் செய்வது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வகுத்துத் தந்த வழிமுறைகளை மீறுவதாகக் கருதப்படும். ''தனது சுயமான கருத்தைக் கொண்டு யார் குர்ஆனுக்குப் பொருள் கொள்கிறாரோ அவர் நரகத்தில் இருப்பார்'' (திர்மிதி) என நபிகளார் நவின்றுள்ளார்கள். ஒருவர் குர்ஆனின் வழிகாட்டுதலைத் திறந்த மனத்துடன் அணுகாமல் தமது சொந்தக் கருத்துகளுக்கு ஆதரவாகவோ தாம் ஏற்கனவே கொண்டுள்ள கருத்துகளை நிரூபிக்கின்ற முறையிலோ அதற்குப் பொருள் கொள்ளக்கூடாது என்பதையுமே இந்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது. அல்லது போதுமான அறிவு இல்லாத ஒருவர் அதற்கு வேறுவிதமாகப் பொருள்கொள்வதையும் இது குறிக்கின்றது. இது தொடர்பாக, இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்; இதன் காரணமாகவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குர்ஆனைப் புரிந்துகொள்ள மிகுந்த அக்கறைகொள்ளும்படி தங்களுடைய தோழர்களை வலியுறுத்தி னார்கள். தோழர்களும் நபிகளார் கூறியபடியே செய்தார்கள். நபிகளாரிடமிருந்து தாங்கள் கேட்ட (அவர்கள் கொடுத்த) பொருளையே ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் அளித்த விளக்கங்களுக்கு இடையில் எந்தவிதமான வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இல்லை.

விளைவுகளுக்கு அஞ்சியே, குர்ஆனின் மொழிபெயர்ப்பைக் கூட கற்றறிந்த ஆசிரியர் ஒருவரின் துணையின்றி ஓதக்கூடாது என பல சமயத் தலைவர்கள் தடை விதித்துள்ளனர்; அல்லது

தனியாகப் படிப்பதற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளனர். அத்தகைய கடுமையான நிபந்தனைகளை மிகுந்த சிரத்தை எடுத்த பின்னரே சிலரால் பின்பற்ற முடியும். இத்தகைய ஆலோசனைகள் நல்ல நோக்கத்துடன் கூறப்படுகின்றபோதிலும், தன்னிடம் வேண்டுபவர் ஒவ்வொருவருக்கும் குர்ஆன் வழங்கவிருக்கின்ற அளப்பரிய செல்வங்களை ஒருவர் பெறுவதிலிருந்தும் அது தடுக்கின்றது. அவர்களது அச்சம் நியாயமாக இருந்தபோதிலும், அத்தடைகளுக்கு அடிப்படையோ தர்க்கரீதியான நியாயமோ இல்லை.

சற்று எண்ணிப் பாருங்கள். குர்ஆனை அப்படியே ஓதி புரிந்துகொள்வதிலிருந்து ஒரு அரபியை அவர்களால் தடுக்க இயலுமா? பின் ஏன் அரபி அல்லாத ஒருவர் அதன் மொழி பெயர்ப்பைப் படிக்கக்கூடாது. ஒருவர் தாம் என்ன ஓதுகின்றோம் என்பதன் பொருளைத் தெரிந்துகொள்வதிலிருந்தோ அதைப் புரிந்துகொள்ள முயல்வதிலிருந்தோ யாரேனும் அவரைத் தடுத்திட இயலுமா? பின் ஏன் குர்ஆனை ஓதி அதன் பொருளை உணர்ந்துகொள்வதற்குத் தடைபோட வேண்டும். இறுதியாக குர்ஆன் வழங்கிய முதல் செய்தியைக் கேட்ட நிராகரிப்பாளர்கள் மற்றும் முஸ்லிம்களின் நிலை என்ன? அவர்கள் படிப்பு வாசனையற்ற வியாபாரிகளாகவும், கிராமப்புறத்தவர்களாகவும் இருந்தனர். அறிவார்ந்த எந்த ஒரு கருவியும் அவர்களிடம் இல்லை. எனினும் சில நிராகரிப்பாளர்கள் குர்ஆன் வசனங் களைக் கேட்ட மாத்திரத்திலேயே, இன்னும் சொல்லப்போனால், முதன் முதலில் கேட்டபோதே எந்த ஒரு கற்றறிந்தவரின் விளக்கத்தையும் பெறாமலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

நிச்சயமாக, குர்ஆனின் செய்தியையும் பொருளையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையையும், குர்ஆன் வகுத்தளித்துத் தந்துள்ள நெறிமுறைகளான கடின சோதனைகள், முழுமையான ஈமான், தாவா, ஜிஹாத் ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்ந்த நபித்தோழர்களையும் நேரில் பார்க்கின்ற இணையற்ற வாய்ப்பை அவர்கள் பெற்றிருந்தனர்.

நமக்கு அத்தகைய வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால், அது நம்மை ஊக்கமிழக்கச் செய்துவிடக்கூடாது. தேவையான முன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த நமக்கு, மிக முக்கியமாக நபித்தோழர்கள் வாழ்ந்து காட்டியது போன்று ஈமான், தாவா, ஜிஹாத் ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட நமக்கு குர்ஆனின் கதவுகள் ஏன் திறக்கக் கூடாது? ஓர் அறிஞரின் காலடியில் அமர்ந்துகொண்டுதான் குர்ஆனைப் புரிந்துகொள்ள முடியும்; அப்படி இல்லாமல் அதனைப் புரிந்துகொள்ள முயலக் கூடாது என்று போடப்படும் தடை வழிகேட்டினின்றும் ஒருவருக்கு நிச்சயமாகப் பாதுகாப்புத் தராது. சரியான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதிலேயே அதற்குரிய நிவாரணம் இருக்கின்றது.

அரபு மொழியறிவைப் பெறுவதற்காக விளக்கவுரைகள் படிப்பதையோ, தகுதி வாய்ந்த நம்பகத்தன்மை கொண்ட ஆசிரியர்களிடம் சமகால மானுட அறிவு பற்றி கற்பதற்கோ இதனை ஒரு மறுப்பாக எடுத்திடலாகாது. அவையும் முக்கியமானவையே! ஆனால் குர்ஆனை ஓதுவதன் மூலம் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தே அவை அமையும். இலக்கை அடைவதற்குரிய கருவிகள் உங்களிடம் இருக்க வேண்டும். ஆனால், அத்தகைய கருவிகள் எதுவும் உங்களிடம் இல்லையென்பதற்காகவோ, ஒரு ஆசிரியரிடம் சென்று கற்க முடியவில்லை என்பதற்காகவோ நீங்கள் குர்ஆனைப் புரிந்துகொள்ளும் முயற்சியைக் கைவிட்டுவிடக் கூடாது.

நீங்கள் ஒரு தீவில் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்களுக்கு அரபி மொழி தெரியாது. அல்லது அதனைக் கற்றிடும் வாய்ப்பும் உங்களுக்கு இல்லை. உங்களுக்கு ஒரு நல்ல ஆசிரியர் அமையவில்லை. நல்ல விளக்கவுரை நூல்கள் கிடைக்கவில்லை. அவற்றைப் பெறவும் உங்களால் இயலவில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையிலும் குர்ஆனை மிகச் சரியான முறையில் புரிந்துகொள்ளத் தேவையான தகுதிகளை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதில் எந்தவிதமான ஐயத்திற்கும் இடமில்லை. அதற்காகச் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும். அப்போதும்

கூட, குர்ஆன் உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து வந்த வழிகாட்டுதலாகவே இருக்கும்.

நல்ல வேளையாக, அப்படிப்பட்ட ஒரு தீவில் நாம் வாழ்ந்திட வில்லை. நம்முடைய எண்ணங்களில்தான் 'தீவுகள்' ஏற்படு கின்றன. இதற்கு நமது அலட்சியமான போக்கும், சோம்பேறித் தனமும், கவனக்குறைவும், செயல்பாடின்மையும்தான் முக்கியக் காரணங்களாகும். அல்லது உடலுக்கு உணவு தேவைப்படுவது போல், இதயத்திற்கு உணவூட்ட, குர்ஆனை நன்கு புரிந்து கொள்ள வேண்டுமென்ற திட எண்ணம் இல்லாததும் ஒரு காரணமாகும். உண்மையில், ஒருவர் ஒரே ஒரு குர்ஆன் பிரதியைத் தமது கைகளில் வைத்துக்கொண்டு ஒரு தீவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்; அதன் பொருளை ஓரளவு புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார் அல்லது குர்ஆனின் அனைத்து அம்சங்களிலும் புலமை பெற்றுள்ளார் என்ற நிலை இருக்குமானால், அவர் குர்ஆனைத் தனிப்பட்ட முறையில் சிந்திப்பதற்குத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை அவருக்கு இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

குர்ஆனின் வலியுறுத்தல்

குர்ஆன், ஒவ்வொருவருக்கும் வழிகாட்டியாகவும், ஆசிரியராகவும், சீர்திருத்துபவராகவும் திகழ்கின்றது. எனவே அதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். இல்லையெனில் அது வெறும் சமயச் சடங்காகவே இருக்கும். (அதற்கு மேல் ஒன்றுமில்லை) தனிப்பட்ட முயற்சிகள், குர்ஆனின் செய்திகளுக்காக இதயங்களையும் உள்ளங்களையும் திறந்து வைக்க வேண்டியதன் தேவை குறித்து குர்ஆனிலேயே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. குர்ஆனைப் புரிந்துகொள்வதி னின்றும் இதயங்களைப் பூட்டி வைத்திருக்கும் முட்டாள்தனம் பற்றி நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம்.

"இவர்கள் குர்ஆனைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அல்லது அவர்களின் இதயங்கள்மீது பூட்டுகள் போடப்பட்டி ருக்கின்றவா?" **(திருக்குர்ஆன் 47 : 24)**

எனவே, தெளிவிற்கும் புரிந்துகொள்வதற்குமான அழைப்பு குர்ஆனின் ஒவ்வொரு பக்கத்திலும் விரவிக் கிடக்கின்றது. அதனை ஏன் நீங்கள் கேட்வில்லை? அதனை ஏன் நீங்கள் பார்க்கவில்லை? அதனைப் பற்றி ஏன் நீங்கள் எண்ணிப் பார்க்கவில்லை? ஏன் தெளிவு பெறவில்லை? ஏன் சிந்திக்கவில்லை? ஏன் புரிந்துகொள்ளவில்லை? ஏன் இதயத்தில் எடுத்துக்கொள்ளவில்லை? இந்த அழைப்புகள் யாருக்காக விடுக்கப்பட்டுள்ளன? கேட்பதற்கும், பார்ப்பதற்கும், சிந்திப்பதற்கும், சக்தி பெற்றுள்ள ஒவ்வொரு மனிதனை நோக்கியும் விடப்பட்ட அழைப்புதானே இது?

"இது பெரும் பாக்கியங்கள் நிறைந்த வேதமாகும். (நபியே) இதை நாம் உம்மீது இறக்கியருளியுள்ளோம். இந்த மக்கள் இதனுடைய வசனங்களைச் சிந்திக்க வேண்டும்; அறிவுடையோர் இதிலிருந்து படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக!" **(திருக்குர்ஆன் 38 : 29)**

இதைப்போல, மிகப் பெரும் கருணையாளனின் உண்மையான அடியார்கள் பற்றி குர்ஆன் புகழ்ந்து பேசுகின்றது. (இபாதுர் ரஹ்மான்)

"மேலும், இறைவனின் வசனங்களை ஓதிக் காட்டி அவர்களுக்கு நல்லுரை வழங்கப்படும்போது அவற்றைக் குறித்து குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருப்பதில்லை." **(திருக்குர்ஆன் 25:73)**

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கேட்கின்ற, பார்க்கின்ற, கவனிக்கின்ற, புரிந்துகொள்கின்ற திறனைப் பயன்படுத்தாதவர்கள் மிருகங்களைவிட மோசமானவர்கள் எனக் குர்ஆன் கடிந்துகொள்கிறது.

"அவர்களுக்கு இதயங்கள் இருக்கின்றன. ஆயினும், அவற்றால் அவர்கள் சிந்தித்துணர்வதில்லை. அவர்களுக்கு கண்கள் இருக்கின்றன. ஆயினும் அவற்றால் அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுக்குக் காதுகள் இருக்கின்றன. ஆயினும், அவற்றால் அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள். ஏன் அவற்றை விடவும்

தாழ்ந்தவர்கள். அவர்கள்தாம் அலட்சியத்தில் மூழ்கியிருப் பவர்கள்.'' (திருக்குர்ஆன் 7:179)

குர்ஆனின் பொருளைத் தெரிந்துகொண்டாலொழிய அல்லாஹ் உங்களிடம் என்ன சொல்கின்றான் என்பதைப் புரிந்துகொண்டாலொழிய, அவற்றைக் கண்டுபிடிக்கின்ற முயற்சிகளில் நீங்கள் தனிப்பட்டமுறையில் ஈடுபாடு கொண்டாலொழிய அதன் உண்மையான வெகுமதிகளையும், அருட்கொடைகளையும் உங்களால் அடைய முடியாது.

தொடக்க கால நடைமுறை

மூன்று நாள்களுக்கும் குறைவான கால அளவில் குர்ஆனை ஓதி முடிக்கக்கூடாது என்பதைக் கூறுகின்ற ஒரு ஹதீஸ் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியதன் தேவையையும் வலியுறுத்துகின்றது. அப்படி ஓதினால் நீங்கள் புரிந்துகொள்ள முடியாது. பொருளைப் புரிந்துகொள்ளாதவருக்கோ அது பற்றிச் சிந்திக்காதவருக்கோ இந்தக் கட்டளை தேவை இல்லை. இமாம் அல் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தமது 'இஹ்யா'வில் எவ்வாறு நபித்தோழர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் இந்தப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார்கள்.

அனஸ் இப்னு மாலிக் ஒருமுறை கூறினார்: ''ஒருவர் அடிக்கடி குர்ஆன் ஓதுகின்றார். ஆனால் அவர் புரிந்துகொள்ளாத காரணத்தால் குர்ஆன் அவரைச் சபிக்கின்றது.'' அப்துல்லாஹ் இப்னு உமர் கூற்றுப்படி, குர்ஆனைப் புரிந்துகொள்வது நம்பிக்கையின் அடையாளமாகும். ''நாம் நீண்டகாலம் வாழ்ந்து விட்டோம்... ஒரு நேரம் வந்தது. அப்போது நம்பிக்கை கொள்வதற்கு முன்னரே குர்ஆன் வழங்கப்பட்ட ஒருவர் அல் ஃபாத்திஹாவிலிருந்து இறுதி வரை அனைத்துப் பக்கங்களையும் அதனுடைய கட்டளைகளையோ, அதனுடைய எச்சரிக்கை களையோ, நின்று நிதானித்து ஓத வேண்டிய பகுதிகளையோ அறிந்துகொள்ளாமல் ஓதி முடிக்கின்றார். அவசரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒருவரைப்போல் அவர் சிதறி ஓடுகின்றார்.''

ஒருமுறை ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு மனிதர் குர்ஆனை முணுமுணுத்துக் கொண்டிருப்பதைக் கேட்டபோது, ''அவர் குர்ஆனை ஒருபோதும் ஓதியதில்லை. அமைதியாகவும் இருந்ததில்லை'' என்று குறிப்பிட்டார்கள். அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது: ''குர்ஆன் ஓதுவது சிந்தனையைத் தூண்டவில்லை யென்றால் அதில் எந்த நன்மையுமில்லை. அபூசுலைமான் பின் தாரனி கூறுகிறார்: ''நான் ஒரு வசனத்தை ஓதிய பின், நான்கைந்து இரவுகளுக்கு அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பேன். அந்த வசனங்களைப் பற்றி தெளிவான விளக்கம் அறிந்து கொண்ட பின்னரே அடுத்த வசனத்திற்குச் செல்வேன்.''

குர்ஆன் ஒவ்வொரு மனிதருக்கும் வழிகாட்டியாக இருக்கின்ற ஒரு வேதமென்றால், தீவில் வசிக்கக்கூடிய ஒரு மனிதரும் அறிவு ஞானத்தில் மூழ்கியவரைப் போல் அதனுடைய வழிகாட்டுதல்களைப் பெற உரியவராகின்றார். ஆசிரியர்கள் இல்லையென்றாலும், விளக்கப் புத்தகங்கள் இல்லையென் றாலும் நீங்கள் தனியாகவோ, கூட்டாகவோ குர்ஆனை ஓதுவதற்கும், புரிந்துகொள்வதற்கும், சிந்திப்பதற்கும், உங்களது வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களைத் தேடிப் பெறுவதற்கும், அது உங்களுக்குச் சொல்லவிருக்கும் செய்தி என்ன என்பதை அறிந்துகொள்வதற்கும் நீங்கள் நேரம் ஒதுக்க வேண்டும்.

தனித்து ஓதுவதிலுள்ள இடர்ப்பாடுகள்

குர்ஆனைத் தனித்து ஓதுவதால் நேரிடக்கூடிய இடர்ப்பாடு களை நீங்கள் தெளிவாக உணர்ந்துகொண்டு அவற்றைத் தவிர்ப்பதற்கான தக்க வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். சில விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் அத்தகைய இடர்ப்பாடுகளைத் தவிர்த்திட முடியும்.

முதலாவதாக, குர்ஆனைப் புரிந்துகொள்வதென்பது மிக விரிவானதும் பன்முகத் தன்மை கொண்டதுமான ஒரு செயல்முறை என்பதையும் அதற்குப் பலவிதமான முறைகள், அம்சங்கள், தரங்கள், அளவுகள் உள்ளன என்பதையும் நீங்கள் நினைவில் இருத்திட வேண்டும். அவை பற்றி நீங்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். குர்ஆனைப் புரிந்துகொண்டு சட்ட

நீதியான அறிவுரைகளைப் பெறுவதைவிடவும், இதயத்திற்கு தெம்பு தரும் புத்துணர்வு பெறுவது முற்றிலும் மாறுபட்டதாகும்.

இரண்டாவதாக, உங்களது திறமைகள் என்ன, வரையறைகள் என்ன என்பது பற்றி நீங்களே சுயமதிப்பீடு செய்துகொள்ளுங்கள். உதாரணமாக, குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கான வழிகாட்டி விதிமுறைகள் அரபு மொழியை உள்வாங்கிக்கொள்ளும் தன்மை, ஹதீஸ் மற்றும் சீறாவைப் பற்றிய அறிமுகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மூன்றாவதாக, உங்களது குறிக்கோளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு ஒதுவதற்கான இலக்கை நிர்ணயித்துக்கொள் ளுங்கள். உங்களது திறமைக்கும் வரையறைக்கும் அப்பாற்பட்டு எதனையும் செய்ய முயலாதீர்கள். எடுத்துக்காட்டாக, உங்களுக்கு அரபு மொழி தெரியவில்லை என்றால், இலக்கணம், மொழிநடை பற்றிய விஷயங்களை அலசிப் பார்க்காதீர்கள். அதனுடைய நேரடியான பொருளை மட்டும் பாருங்கள். தன்ஸில் (வெளிப்பாடுகள்) பற்றியோ, நாசிக் மன்சுஹ் (ரத்துச் செய்தல்) பற்றியோ, தொடக்கக் கால சட்ட வல்லுநர்களின் பணிகள் பற்றியோ அறிந்திட முயல வேண்டாம். உங்களுக்குத் தெரியாத நிலையில், நீங்களாகவே குர்ஆனிலிருந்து 'பிக்ஹ்' பெறுவதற்கு முயலவோ குறை காணவோ ஒரு குறிப்பிட்ட கருத்துக்கு ஆதரவாகப் பொருள்கொள்ளவோ வேண்டாம்.

நான்காவதாக, உம்மத்துக்களின் ஒருமித்த கருத்துகளுக்கு எதிராகவோ மாறுபாடாகவோ உங்களது சொந்தக் கருத்துகளை ஒருபோதும் முடிவாக எடுத்துக் கொண்டு பரப்புரை செய்யாதீர்கள். நீங்கள், உங்களது கருத்துகளைக் கொண்டிருப் பதற்கு இதனை ஒரு தடையாகவோ அல்லது கற்றறிந்த ஒருவரின் கருத்துக்கள் தவறானவை என்று மறுப்பதற்கான ஒரு தடையாகவோ கருதிடக் கூடாது.

ஆனால் எதிர்வாதம் புரிவதற்கும் எதிராகக் கருத்துச் சொல்வதற்கும் நீங்கள் அதிகமாக இல்லையென்றாலும் அவர்களுக்குச் சமமாகவாவது ஒதியிருக்க வேண்டும்.

குர்ஆனிலிருந்து தார்மிக ரீதியில் சரியானது என நீங்கள் அறிகின்றவற்றைச் செய்வதற்கும், தார்மிக ரீதியில் தவறானது என நீங்கள் அறிகின்றவற்றைச் செய்யாமல் தவிர்த்திடவுமான உங்களது பொறுப்பிலிருந்து இது உங்களை விடுவிக்காது.

ஐந்தாவதாக, உங்களது வரையறைக்குட்பட்ட அறிவு காரணமாக நீங்கள் எடுக்கும் முடிவுகள் சரிதானா என்று உங்களுக்கு ஐயங்கள் தோன்றலாம். குர்ஆனை நன்கு கற்றறிந்த, நம்பகமான அறிஞர் ஒருவருடன் நீங்கள் முழுமையாக விவாதித்துத் தெளிவுகாணும் வரை உங்களது கருத்துகளை வெளியிடாமல் தற்காலிகமாக நிறுத்தி வைத்துக்கொள்ளுங்கள்.

புரிதல் வகைகள்

விரிவான முறையில், குர்ஆன் ஓதுவதை இரண்டு வகை களாகப் பிரிக்கலாம். அவை ததக்கூர் - ததப்புர் என வகைப்படும். குர்ஆன் வசனங்கள் இவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

"...இந்த மக்கள் இதனுடைய வசனங்களைச் சிந்திக்க வேண்டும். அறிவுடையோர் இதிலிருந்து படிப்பினை பெற வேண்டும்."

(திருக்குர்ஆன் 38 :29)

ததக்கூர்

'ததக்கூர்' குர்ஆனில் அதிக அளவில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு எச்சரிக்கை பெறுதல், புத்திமதி பெறுதல், நினைவில் வைத்தல், கவனம் செலுத்துதல், படிப்பினை பெறுதல், இதயத்தில் இருத்தி வைத்தல் என்று பல பொருள்கள் உள்ளன. எனவே குர்ஆன் வழங்குகின்ற பொதுவான செய்திகளையும், போதனைகளையும் உள்வாங்கச் செய்கின்ற முயற்சிகள் பற்றியும், அவை உங்களுக்கு என்ன சொல்ல வருகின்றன, நீங்கள் என்ன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றது என்பது பற்றியும், அவற்றை மனத்திலே இருத்தி, அதற்கு உங்களது இதயமும், உள்ளமும் அளிக்கின்ற தக்க பதில்கள் பற்றியும், நீங்கள் என்ன கண்டுள்ளீர்களோ அதன்படி செயல்படுகின்ற உறுதி பற்றியும்,

முடிவாக என்ன செய்தியை நீங்கள் உங்களது சக மனிதர்களுக்குச் சொல்ல முடிவு செய்துள்ளீர்கள் என்பது பற்றியுமான செயல்முறைத் திட்டத்தையே இது குறிக்கிறது.

ததக்கூர் என்பது புரிதலின் ஒரு வகையாகும். இதற்கு எந்தவிதமான அறிவுசார் சாதனங்களும் தேவையில்லை. ஒவ்வொரு வார்த்தையின் பொருளும் உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அல்லது முக்கியமான வார்த்தைகளின் பொருளை உணர்ந்துகொள்ள முடியாத நிலையில் நீங்கள் இருக்கலாம். ஒவ்வொரு வசனத்தையும் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். ஆனால் பொதுவாக அதிலும் குறிப்பாக நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிவிக்கின்ற செய்திகள் உங்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிய வேண்டும்.

குர்ஆனை முதன் முதலில் கேட்டவர்களே, அதனை நன்றாகப் புரிந்துகொண்டு அதன் நன்மைகளைப் பெற்றவர்கள். அவர்கள் நகர்ப்புற வணிகர்களாகவும், விவசாயிகளாகவும், ஆடு மேய்ப்பவர்களாகவும் ஒட்டகச் சவாரி செய்பவர்களாகவும், நாடோடிகளாகவும் இருந்தனர். மொழிச் சொல்லகராதி அவர்களிடம் இல்லை. விளக்கவுரை நூல்களோ, ஆராய்ச்சி நூல்களோ இல்லை. மொழிநடை, அணி இலக்கணம், எதுகை மோனைகள் ஆகியன பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. தத்துவம், வரலாறு, பூகோளம், தொல்பொருள் ஆய்வு, மனித சாஸ்திரம், சமூக இயற்பியல், விஞ்ஞானம் ஆகியன பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனினும், குர்ஆனைப் புரிந்துகொள்வதில் அவர்கள் பெரும் பெற்றி பெற்றிருந்தார்கள். குர்ஆனின் செய்திகளை தங்களுடைய இதயங்களிலே இருத்தி அதன்படி வாழ ஆரம்பித்தார்கள். இது பற்றிய தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் புரிதல் நிச்சயமாக இருக்கும். அவன் என்ன பெறுகிறான் என்பதன் தரமும், தெளிவும் அவனது முயற்சி, திறமையையும் பொறுத்தே அமைகிறது. நிச்சயமாக, அறிவுசார் சாதனங்கள் இந்தச் செயல்முறைகளுக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்க்கும். கூடுதல் முக்கியத்துவத்தை அளிக்கும். புதிய தெளிவுகளைத் தரும். ஆனால் இவை கட்டாயமல்ல.

புரிந்துகொள்வதற்கு மிக எளிதானதென்றும், என்ன ஓதுகிறோம் என்பதைப் புரிந்துகொண்டு அது பற்றிச் சிந்தனை செய்கின்ற ஒவ்வொருவருக்கும் நற்பயன்கள் கிடைக்கின்றன என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது. ததக்கூர் என்பதன் பொருள் இதுதான்.

"நாம் இந்தக் குர்ஆனை, அறிவுரை பெறுவதற்காக மிக எளிய முறையில் அமைத்திருக்கின்றோம். பின்னர், அறிவுரையை ஏற்றுக்கொள்ள எவரேனும் இருக்கின்றனரா?"
(திருக்குர்ஆன் 54 : 17)

"(நபியே!) இவர்கள் அறிவுரை பெற வேண்டுமென் பதற்காக நாம் இவ்வேதத்தை உம்முடைய மொழியில் எளிமையாக்கித் தந்துள்ளோம்." **(திருக்குர்ஆன் 44:58)**

"நாம் இந்தக் குர்ஆனில் மக்களுக்கு விதவிதமான எடுத்துக்காட்டுக்களைக் கொடுத்திருக்கின்றோம். அவர்கள் விழிப்படைய வேண்டும் என்பதற்காக!"
(திருக்குர்ஆன் 39 : 27)

"இதயமுள்ள அல்லது கவனத்தோடு செவிமடுக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் திண்ணமாக இந்த வரலாற்றில் படிப்பினையூட்டும் பாடம் இருக்கின்றது."
(திருக்குர்ஆன் 50 : 37)

ததக்கூர் என்பது புரிதலின் தாழ்ந்த வழிமுறை என்று கருதக்கூடாது. குர்ஆனின் அடிப்படைத் தேவையின் நோக்கம் அதுதான். ததக்கூர் வாயிலாக நீங்கள் வெளிச்சமும், வழிகாட்டுதலும் நிவாரணமும் பெறும் வகையில் உங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த செயல்முறையின் மூலம் எண்ணற்ற ரத்தினங்களைச் சேகரிக்கும் முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும்.

ததப்பூர்

ததப்பூர் என்பது புரிதலின் இன்னொரு வகையாகும். ஒவ்வொரு வார்த்தை, வசனம், அத்தியாயம் ஆகியவற்றின்

முழுப் பொருளையும் அறிய முயல்வது; வார்த்தைகள், உருவணிகள், எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றின் பின்னால் மறைந்திருக்கும் முழுப்பொருளையும் கண்டுபிடிப்பது. உள்ளடக்கப் பகுதியின் ஒருங்கிசைவு, அதில் காணப்படும் ஒற்றுமை ஆகியவற்றைக் கண்டுபிடித்தல், மையக்கருத்துக்கள் எவை எனத் தீர்மானித்தல், இலக்கணச் சிக்கல்களை அலசி ஆராய்தல், தன்னில் வரலாற்றுப் பின்னணி, பலதரப்பட்ட விளக்கவுரைகளை ஒப்பாய்வு செய்தல் என இந்த வார்த்தைக்குப் பல பொருள்கள் உள்ளன. இறைவனுடன் மனிதன் கொண்டிருக்கும் உறவுகள், தன்னுடைய சக மனிதர்களோடு கொண்டிருக்கும் உறவுகள், அவனது உறவுகள், தன்னைச் சுற்றியுள்ள உலகத்துடனான உறவுகள் ஆகியவற்றின் தாத்பர்யத்தை அவன் கண்டுபிடிக்க வேண்டும். தனிமனிதர் களுக்கும் சமூகத்திற்கும் தேவையான நெறிமுறைகள் பற்றிய சட்டங்கள், அரசுக்கும் பொருளாதாரத்திற்குமான சட்டங்கள், வரலாற்றுக்கும் தத்துவத்திற்குமான குறிக்கோள்கள் மனித அறிவின் நிலை பற்றிய தற்போதைய கருத்துருவாக்கம் ஆகியவற்றையும் கண்டுபிடிக்க வேண்டும்.

அத்தகைய ஒரு விரிவான ஆய்விற்குப் பல்வேறு உலூமுல் குர்ஆன் பற்றிய ஆழ்ந்த அறிவு தேவைப்படும். அவை, உங்களது குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளைப் பொறுத்து அமையும்.

ததக்கூர், ததப்பூர் ஆகிய இருவகை வழிமுறைகளும் தனித்தனியானவை அல்ல. அல்லது ஒன்றுக்கொன்று புரிதல்களில் பிரத்யேகமான வழிமுறைகளும் அல்ல. அவை ஒன்றின் மேல் ஒன்று படியக்கூடியதே.

உங்கள் குறிக்கோள்கள்

உங்கள் குறிக்கோள்கள் என்னவாக இருக்க வேண்டும்? பொதுவாகக் குறிக்கோள்கள் மனிதனுக்கு மனிதன் மாறுபடும். ஒரே மனிதருக்கே காலத்திற்குக் காலம் மாறுபடும். எனவே குர்ஆனைப் புரிந்துகொள்ளும் வல்லமையைப் பெற 'ததக்கூர்' ஒவ்வொரு முஸ்லிமிற்கும் கட்டாயம் இருக்க வேண்டும்.

எனவே தன்னுடைய திறமைகளுக்கும் வரையறைக்குமேற்ப இறைவனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்கின்ற ஒரு சராசரி கல்விகற்ற முஸ்லிமிற்கு 'ததக்கூர்' மிக முக்கியக் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதனை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது.

உங்களது இதயத்திற்கும் உள்ளத்திற்கும் உற்சாகம் அளிக்கவும், உங்களது நம்பிக்கையை அதிகப்படுத்தவும், குர்ஆனின் செய்தியை அறிந்துகொள்ளவும், அதனைச் சிந்தனையில் இருத்தவும், நினைவில் வைத்திருக்கவும், 'ததக்கூர்' மிகவும் அவசியமானது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களது அனைத்து முயற்சிகளின் மூலமாக இறைவனின் குரலைக் கேட்கவும், அவன் என்ன விரும்புகிறான் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

புரிதலின் வழிகளும் நிலைகளும்

குர்ஆனைப் புரிந்துகொள்ள உங்களுக்குப் பலதரப்பட்ட நிலைகளும் வழிமுறைகளும் இருக்கலாம்.

முதலாவதாக, உங்களது மொழியில் உள்ள ஒரு புத்தகத்தைப் படிப்பது போல அல்லது அரபு மொழி தெரிந்த ஒருவர் குர்ஆனைப் புரிந்துகொள்வது போல நீங்கள் அதனுடைய எளிய நேரடியான பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நன்கு கற்றவர்கள் எப்படி அதனைப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதை அவர்களுடைய விளக்கவுரைகளைக் கேட்டோ, அவர்களுடைய நுட்பமான விளக்கவுரைகளைப் படித்தோ பிற வழிகளிலோ அறிந்துகொள்வது.

மூன்றாவதாக, நீங்களே ஒதிப் புரிந்துகொண்டு அதனை உள்வாங்கி ததக்கூர் நிலையை அடைவது. அல்லது உங்களுக்குத் திறமையும் தேவையும் இருந்தால் ததப்பூர் நிலையையும் அடைவது.

நான்காவதாக, அதனுடைய செய்திகளுக்குக் கீழ்ப்படிந்தும், அது உங்களிடம் ஒப்படைத்துள்ள கடமைகளையும், குறிக்கோள்

களையும் நிறைவேற்றுவதன் மூலம் அதன் பொருளை உணர்ந்துகொள்வது.

அடிப்படைத் தேவைகள்

உங்களது முயற்சிகள் வெற்றிபெற சில அடிப்படையான முன் நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றிட வேண்டும்.

அரபு மொழி

ஒன்று: மொழிபெயர்ப்பு நூலின் துணை இல்லாமல் குர்ஆனைப் புரிந்துகொள்ளத்தக்க அளவிற்கு அரபு மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள். இதுவே முதலாவதும் அவசியமானதுமான நிபந்தனையாகும். இது ஒரு கடினமான பணியாகத் தோன்றலாம். ஆனால் அதிகம் கல்வி கற்காத சிலர் சில மாதங்களிலேயே தீவிரமாகவும் ஈடுபாட்டு உணர்வுடனும் படித்து அம்மொழியைக் கற்றுக்கொண்டுள்ளனர். ஒரு தகுதி வாய்ந்த ஆசிரியரின் அல்லது தக்க நூல் ஒன்றின் துணையுடன் குர்ஆனின் செய்தி என்ன என்பதைப் புரிந்துகொள்ளத்தக்க அளவிற்கு அரபு மொழியை நீங்கள் 120 மணி நேரத்தில் கற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் அரபு மொழியைக் கற்றுக்கொள்ளும்வரை குர்ஆன் ஓதுவதை ஒத்தி வைக்க வேண்டாம். நல்ல ஒரு மொழிபெயர்ப்பு மூலம் அல்லது வேறு ஏதாவது ஒரு சிறந்த வழிமுறையில் உங்களது முயற்சிகளைத் தொடங்குங்கள். குர்ஆனைப் புரிந்து கொள்ளாமல் வெறுமனே ஓதுவதைவிட இது சிறந்ததாகும்.

முழு குர்ஆனையும் ஓதுதல்

இரண்டு: முதலில் குர்ஆனை தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஓதுங்கள். அதன் நேரடியான, சரியான பொருளைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு அரபு மொழி தெரியவில்லை என்றால், குர்ஆனின் மொழிபெயர்ப்பை வைத்துக்கொள் ளுங்கள்.

உண்மையில், குர்ஆனை ஒரு மாதத்திற்குள் ஓதி முடித்திட நீங்கள் தக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு

இரண்டு மணி நேரம் இதற்காகச் செலவிட்டால் போதுமானது. அதற்குப் பிறகு, உங்களது வசதிக்கு ஏற்ப மெதுவாக இடைவெளிவிட்டு ஓதிக் கொள்ளலாம். ஆனால் வாழ்க்கை முழுவதும் உங்களுக்கு உகந்த முறையில் கால அவகாசம் எடுத்துக்கொண்டு ஓதுவதற்கான விதிமுறைகளின்படி நீங்கள் ஓதி வர வேண்டும்.

ஆழமாக ஓதும் முன்னர், குர்ஆனை தொடக்க கட்டமாக முழுவதும் ஓதி முடிப்பது மிகவும் முக்கியமானதாகும். அது குர்ஆனின் பொதுவான செய்திகளையும், அதனுடைய மொழி நடை, சொற்பிரயோகம், பொருள் சுருக்கம், அணி இலக்கணம், போதனைகள், கட்டளைகள் (தடைகள்) ஆகியன பற்றி அறிந்துகொள்ள உதவும். குர்ஆனைத் தொடர்ந்து ஓதிவந்தால், நீங்கள் அதனுடன் நன்கு அறிமுகமாகி அதனுடைய ஒத்திசைவுத் தன்மையை உணர்ந்து அதனை முழுமையாகப் பார்க்கத் தொடங்குவீர்கள். இதன் மூலம், குர்ஆனின் வரம்பிற்கு அப்பாற்பட்டு அதற்குப் பொருள்கொள்ளும் அபாயமும் மிகக் குறைவாகவே இருக்கும். குர்ஆனின் உட்பொருள், சூழ்நிலை ஆகியவற்றுடன் தாங்கள் கொண்டுள்ள அறிமுகத்திற்கு மாறாக, அதன் பொருளடக்கத்தைப் பார்த்து ஓதுகின்றவர்கள், தவறான முறையில் விளக்கம் அளிக்க வாய்ப்புகள் உள்ளன.

குர்ஆனைத் தொடர்ந்து ஓதிவருவது அதனை முழுமையாகப் புரிந்துகொள்வதற்குரிய ஒரு திறவுகோலாக இருக்கும். அதனுடைய ஒவ்வொரு வார்த்தையையும், வசனத்தையும் புரிந்துகொள்வதற்கு அது பெரிதும் உதவும். நீங்கள் குர்ஆனைத் தொடர்ந்து ஓதி வந்தால், அதன் சில வசனங்கள் திடீரென்று உங்களுடன் பேசுவது போலவும், உங்களது கேள்விகளுக்குத் தக்க பதில்கள் அளிப்பது போலவும் பல நேரங்களில் உங்களுக்குத் தோன்றும்.

உண்மையில், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், உங்களுடைய வேறுபட்ட குறிக்கோள்களை அடைந்திட பலதரப்பட்ட வழிமுறைகளை நீங்கள் குர்ஆன் மூலமாக ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஓதி முடிக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் வேகமாக ஓதிவரலாம். அல்லது

ஒரு வசனம் அல்லது ஒரு வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்வதற்காக நீங்கள் பல மணிநேரம் செலவு செய்யலாம். பொருளைப் புரிந்துகொள்வதற்காக, ஒரு குறிப்பிட்ட பகுதியை மீண்டும் மீண்டும் வேகமாகவோ, மெதுவாகவோ ஓதி வரலாம். குர்ஆனுடன் ஏற்கனவே நன்கு அறிமுகமாகிவிட்ட நிலையில், ஏதேனும் ஒரு விஷயத்தில் அல்லது கருத்தில் நீங்கள் வழிகாட்டல் பெற எண்ணினால், அதன் பக்கங்களை வேகமாகத் திருப்பலாம். நீங்களாகவே சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அதற்குக் குறைந்த நேரமே பிடிக்கலாம். அல்லது நீங்கள் பெரிய, சிறிய விளக்கவுரைகளை வைத்துக்கொண்டு ஒப்பாய்வு செய்கின்ற போது ஒரு சிறு பகுதியை முடிப்பதற்கே உங்களுக்கு அதிக நேரம் பிடிக்கலாம்.

விளக்கவுரைகளைப் படித்தல்

மூன்று: நன்கு புரிந்துகொண்டு குர்ஆன் முழுவதையும் ஒருமுறை ஓதி முடித்த பின்னர் உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கால இடைவெளி விட்டு வழக்கமாக ஓதி வாருங்கள். நம்பகமான விரிவுரைகள் அல்லது குறிப்புகளை வைத்துக்கொள்ளுங்கள். சுருக்கமான மிக நல்ல விரிவுரைகள் அரபி, பார்ஸி மற்றும் பிற மொழிகளில் தற்போது கிடைக்கின்றன. (தற்போது ஆங்கிலத்திலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் இவை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன) எப்படியாயினும் கிடைக்கின்றவற்றைக் கொண்டு எச்சரிக்கை உணர்வுடன் படித்தால் நீங்கள் பயன்பெறுவீர்கள்.

சிறிய விளக்கவுரைகளை அல்லது குறிப்புகளை நீங்கள் ஏற்கனவே சுயமாகப் பெற்றிருப்பதற்கு மேலதிகமாக உங்களுக்குக் குர்ஆனைப் பற்றி விரிவான விளக்கங்கள் பெற்றிடத் துணை செய்யும். மிக முக்கியப் பகுதிகளான மொழிநடை, பொருள் சுருக்கம், வரலாற்றுப் பின்னணி, விரிவான அர்த்தங்கள் ஆகியன பற்றி உங்களது சிந்தனைகள் புரிதல்கள் மூலமாக நீங்கள் பெற முடியாத அம்சங்களை அவை உங்களுக்குத் தெரிவிக்கும். உங்களுடைய சிறிய தவறுகளையும் அது சரி செய்துவிடும்.

குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும்போது உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், சிறிய விளக்கவுரைகளை மட்டுமே பாருங்கள். ஆரம்பக் கட்டத்தில் மிக நீண்ட, விரிவான, நுட்பமான விளக்கவுரைகள் தேவையில்லை. பல நேரங்களில் விரிவான விளக்கங்கள் இறைவனின் வார்த்தைகளோடு உங்களுடைய நேரடியான உறவிற்குத் தடைகளாக அமையக் கூடும். முழு விளக்கவுரை கிடைக்கவில்லையென்றால் பகுதி விளக்கவுரைகளைப் படியுங்கள். மேலும் இஸ்லாமிய இலக்கியத்தைப் படிக்கின்றபோது, குர்ஆனின் மையக் கருத்தாக இருக்கின்ற விஷயங்களையும் முடிவுகளையும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவை மிகப் பரந்த அளவில் சிதறிக் கிடக்கின்றபோதிலும், புரிந்துகொள்வதற்கான சில பயனுள்ள சாதனங்களை நீங்கள் அவற்றில் காணலாம்.

மிக நுட்பமான விளக்கவுரைகள் இல்லாமலேயே, எப்படி வாழ வேண்டும் என்பது பற்றிய அவசியச் செய்திகளை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். சில ஐயங்களைத் தீர்ப்பதற்கும், சில முக்கியமான விஷயங்களை ஆய்வு செய்வதற்கும், மறைவான விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்குமே உங்களுக்குத் தப்ஸீர்கள் தேவைப்படும்.

தேர்ந்தெடுத்த பகுதிகளை ஓதுதல்

நான்கு: குர்ஆனை, நீங்கள் தொடக்கத்திலிருந்து கடைசி வரை ஓத வேண்டும். இன்ஷா அல்லாஹ், உங்களில் சிலர் அந்த முயற்சியில் ஈடுபடுவீர்கள். ஆனால் பலருக்கு அந்த நாள் தொலைவிலேயே இருக்கலாம். அது ஒருபோதும் வராமலும் போகலாம். எனவே நீங்கள் சுயமாக உங்களால் முடிந்த அளவிற்கு அதனை ஓதத் தொடங்க வேண்டும்.

இதற்காக சில வசனங்களை, சில பகுதிகளை, சில அத்தியாயங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதை விரிவான முறையில் ஓதிவர வேண்டும். சில சமயங்களில், சுய முன்னேற்றத்திற்காக உங்களது ஈடுபாடும் தாவாவும் சில குறிப்பிட்ட பகுதிகளை ஓதிட உங்களைத் தூண்டும்.

ஊக்குவிக்கும். சில சமயங்களில், வழக்கமாக ஓதிக் கொண்டி ருக்கும்போதே, சில குறிப்பிட்ட பகுதிகளை விரும்பி மீண்டும் மீண்டும் நீங்கள் ஓதிட முனைவீர்கள். ஆனால் நீங்கள் முறையாக வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தைப் பின்பற்ற வேண்டும். எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்பதல்ல, எப்படி ஓத வேண்டும் என்பதை அறிந்துகொள்வதே மிக முக்கியமான விஷயமாகும். இந்த நூலின் பின் பகுதியில், சில தேர்ந்தெடுக்கப் பட்ட பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுத்த பகுதிகளை ஓதுவது உங்களுக்குப் பல வழிகளிலும் பயனுள்ளதாக இருக்கும். முதலாவதாக, குர்ஆனை நோக்கிய உங்களது பயணத்தில் முக்கியமான நிலையில் நீங்கள் முன்னேற்றம் அடைவீர்கள். கால வரையின்றிக் காத்திருப்பதை விட, மிக அவசியத் தேவையான ததக்கூர் வழிமுறையை நீங்கள் ஏற்படுத்திக் கொள்வீர்கள். இரண்டாவதாக உங்களுக்கு முக்கியமான குறிப்புகளும், திறவுகோல்களும், செயல்முறை களும் தெரியவரும். அதன் மூலம் உடனடியாக விரிவான முறையில் ஓத இயலாத குர்ஆனின் பகுதிகளையும் புரிந்து கொள்வீர்கள். மேலும் அதில் கருத்துகள் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளன. (திருக்குர்ஆன் 39:23) மூன்றாவதாக, குர்ஆனைச் சரியான முறையில் புரிந்துகொள்ள அதன் முழு நியதிகளையும் நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள். நான்காவதாக, குர்ஆனை சக மனிதர்களுக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான முழு வாய்ப்பு வசதிகளையும் நீங்கள் பெற்றிடுவீர்கள்.

எனினும் சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் விரிவாக ஓதுவது குர்ஆனைப் பொதுவாக ஓதுவதற்கு நிகராக ஒருபோதும் இருக்க முடியாது. அதன் நன்மைகள், பல தன்மைகள் கொண்டன வாகவும் முக்கியமானவையாகவும் உள்ளன. ஆகையால், குர்ஆனை வழக்கமாக ஓதுவதையோ ஏற்கனவே வலியுறுத்தியுள்ளபடி மிக நீண்ட பகுதிகளை ஓதுவதையோ விட்டுவிடாதீர்கள். விவரங்களை மட்டும் பார்த்துவிட்டு, முழுப் பகுதிகளையும் விட்டுவிடுவது உங்களது பார்வையையும் புரிதலையும் திரித்துவிடும்.

மீண்டும் மீண்டும் ஓதுதல்

ஐந்து: எந்தப் பகுதியை ஓத வேண்டுமென்று தேர்ந்தெடுத்துள் ளீர்களோ அதனை மீண்டும் மீண்டும் ஓத வேண்டும். இதனைப் பெருமளவு பின்பற்றி நடக்க வேண்டும். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு காலத்திற்கு அதனை ஓதிக் கொண்டே இருங்கள். அதனுடனேயே வாழ்ந்திடுங்கள். அதனையே உங்களது இருப்பிடமாகக் கொள்ளுங்கள். அதுவும், உங்களது இதயத்தை யும் உள்ளத்தையும் இருப்பிடமாக்கிக் கொள்ளட்டும். அத்தகைய ஒரு நீடித்த தொடர்பு, குர்ஆனைப் புரிந்துகொள்வதற்குத் திறவுகோலாக அமையும். குர்ஆனின் வார்த்தைகள் உங்களது இதயங்களில் செதுக்கப்பட்டிருப்பதால், அவை உங்களது உதடுகளிலிருந்து அடிக்கடி வெளிப்படும். அது பற்றிச் சிந்திப்பதற்கென்று நீங்கள் ஒதுக்கியுள்ள நேரங்களைத் தவிர, எந்நேரமும் உங்களது ஒவ்வொரு நாள் வாழ்க்கையிலும், அதன் பொருளை உங்களுக்கு வெளிப்படுத்தும். அதன் மூலம் அதன் வார்த்தைகளும், வசனங்களும் உங்களது மனதிற்குத் திரும்ப வரும்.

ஆய்வு செய்யும் மனம்

ஆறு: ஆய்வு செய்கின்ற மனத்தை, தேடுகின்ற ஆன்மாவை, பொருள் (அர்த்தத்தை) நாடுகின்ற இதயத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். குர்ஆன் ஒரு குருட்டுத்தனமான நம்பிக்கையை வேண்டவில்லை. அல்லது உங்கள் கண்களையும், காதுகளையும் மூடிவிட்டு, மனத்தையும் பூட்டிவிட்டுத் தன்னை ஓதும்படி குர்ஆன் கூறவில்லை. சிந்திக்குமாறு அழைப்பு விடுப்பது குர்ஆன் வலியுறுத்திக் கூறுகின்ற அதனுள் ஊடுருவியிருக்கின்ற கருத்துகளில் முக்கியமானதாகும்.

கேள்வி கேட்பது புரிதலுக்கும் ஞானம் அடைவதற்கும் உரிய திறவுகோல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகவே தேவையான அளவிற்கு எவ்வளவு அதிகமான கேள்விகளை எழுப்ப முடியுமோ அந்த அளவிற்கு எழுப்புங்கள். சான்றாக, இந்த வார்த்தையின் அல்லது வசனத்தின் நேரடிப் பொருள்

என்ன? இதற்கு வேறு என்ன பொருள் கொள்ளலாம்? அதன் வரலாற்றுப் பின்னணி, அருளப்பட்ட சந்தர்ப்பம் என்ன? ஒவ்வொரு வார்த்தையும், வாக்கியமும் வசனமும் எந்தச் சூழ்நிலைகளில் அருளப்பட்டன? அதற்கு முன்பும் பின்பும் சொல்லப்பட்டுள்ளவற்றில் இதனுடைய தொடர்பு என்ன? அவற்றில் காணப்படும் உள் ஒழுங்கும் கருத்து ஒற்றுமையும் என்ன? என்ன கூறப்பட்டுள்ளது? ஏன் கூறப்பட்டுள்ளது அதன் பொதுவான, குறிப்பான தாக்கங்கள் என்னென்ன? அதன் பெரும்பான்மைக் கருத்து என்ன? அதன் மையக் கருத்து என்ன? எனக்கு அது இப்போது தருகின்ற செய்தி என்ன? இது போன்று உங்களுக்கு எழும் கேள்விகளையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டு குர்ஆனை ஓதுகின்றபோது அக்கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்.

கேள்விகளை எழுப்பப் தயங்காதீர்கள். அதற்கான பதில்களை உங்களால் சுயமாகவோ, தக்க உதவி கொண்டோ உடனடியாகப் பெற முடியாமல் இருக்கலாம். அது பிரச்னையல்ல. நீங்கள் என்ன பதிலைக் கண்டுபிடித்தாலும் அது உங்களுக்கு லாபமே. சில விதிமுறைகளைக் கடைப்பிடித்தால் நீங்கள் இழப்பதற்கு எதுவும் இருக்காது. முதலாவதாக, மனித சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றிக் கேள்வி எழுப்பாதீர்கள். அவை 'முதாஷாபிஹாத்' வசனங்களாகும். (3:7) எடுத்துக்காட்டாக 'அர்ஷ்' என்றால் என்ன என்பது போன்ற கேள்விகள். இரண்டாவதாக, முடியைப் பிய்த்துக்கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடாதீர்கள். மேலும் உங்களது வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்காதீர்கள். மூன்றாவதாக, அறிவு மற்றும் விவேகத்தின் அடிப்படையில் அமையாத பதில்களைக் கொடுக்க முயற்சி செய்யாதீர்கள். நான்காவதாக, நீங்கள் பதில் காண முடியாத கேள்விகளும் இருக்கக்கூடும். நீங்கள் மிகுந்த முயற்சிகள் மேற்கொண்டாலும் உங்களால் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாது. அவற்றை அப்படியே விட்டுவிட்டுப் பிற பகுதிகளை ஓதுங்கள். ஒரு நேரம் வரும். அப்போது உங்களுக்கு உதவி செய்ய ஓர் ஆசிரியரோ ஒரு புத்தகமோ வரக்கூடும். அல்லது நீங்களே அதற்கான பதில்களைக் கண்டுபிடித்துவிடுவீர்கள்.

முதல் நம்பிக்கையாளர்கள் எப்படிக் கேள்விகள் எழுப்பினர் என்று குர்ஆனிலேயே போதுமான சான்றுகள் உள்ளன. அதுபோன்றே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் எங்ஙனம் ஆராய்ச்சி செய்வதை, கேள்விகள் கேட்பதை, சிந்திப்பதை ஊக்குவித்தார்கள் என்பதற்கும் ஏராளமான நிகழ்வுகள் இருக்கின்றன.

படிப்பதற்கான சாதனங்கள்

ஏழு: குர்ஆனை ஓதுகின்றபோது, உங்களுக்குச் சில சாதனங்கள் தேவைப்படலாம். அவற்றைப் பெருமளவில் பெற்றிட முயற்சி செய்யுங்கள்.

1. உங்களது தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள குர்ஆனின் பிரதி ஒன்றை உங்கள் கைவசம் வைத்துக்கொள்ளுங்கள். இது உங்களின் மிகக் குறைந்தபட்சத் தேவையாகும். இதனை நீங்கள் பொதுவாக ஓதுவதற்கும் ஆய்விற்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்கு வசதியாக இருந்தால் மனப்பாடம் செய்துகொள்ள அதனையே பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், வாழ்நாள் முழுவதும் மனப்பாடம் செய்திட அந்தப் பிரதியையே நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் திருப்பிப் பார்ப்பது சிரமமாகிவிடும். எந்த ஒரு மொழிபெயர்ப்பும் நிறைவாகவோ, சரியாகவோ இருக்க முடியாது. ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும், மொழிபெயர்ப்பாளர்களின் கருத்துகள் புகுந்திட வாய்ப்புகள் உள்ளன. எனவே, அது குர்ஆனின் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாக இருக்காது; இருக்கவும் முடியாது.

2. அதே பிரதியில் சிறு விளக்கவுரைகள் இருக்கலாம். அதனை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது தனியாக ஒரு விளக்கவுரையை வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் உங்களிடம் ஒரே ஒரு விளக்கவுரை மட்டுமே இருக்க வேண்டும். ஒரு மொழிபெயர்ப்புப் பிரதியும் நம்பகமான ஒரு விளக்கவுரையும் ஆரம்ப நிலையில் போதுமானவையாக இருக்கும்.

3. தேவையில்லை என்றாலும்கூட ஒன்றுக்கு மேற்பட்ட

மொழிபெயர்ப்புப் பிரதிகளையும், விளக்கவுரைகளையும் வைத்துக்கொள்ளலாம். இவை பல்வேறு அறிஞர்கள், குர்ஆனின் வசனங்களுக்கும், உள்ளடக்கப் பகுதிக்குமான பொருளை எங்ஙனம் புரிந்துகொண்டுள்ளனர் என்பதை அறிந்துகொள்ளப் பயன்படும்.

4. மேலும் ஆழ்ந்த படிப்பிற்கு, இன்னுமொரு தெளிவான விளக்கவுரையை (தப்ஸீர்) நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும். ஆங்கில விளக்கவுரை உங்களுக்குக் கிடைக்காமல் இருக்கலாம். ஆனாலும், ஏதேனும் ஒரு பகுதிக்கான விளக்கவுரை கிடைத்தாலும் அதனை வைத்துக்கொள்ளுங்கள்.

5. ஒரு நல்ல அரபு மொழி அகராதியை, குறிப்பாக குர்ஆன் அகராதி ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள். வார்த்தைகளின் ஆழமான, நுட்பமான பொருளை அறிந்துகொள்ள அது பயன்படும்.

6. பொருளடக்கம் ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள்.

ஓதுவதற்குத் தேவைப்படும் சில சாதனங்கள் இந்நூலின் பிற்பகுதியில் கூறப்பட்டுள்ளன.

ஓதுவது எப்படி?

தேர்ந்தெடுத்த ஒரு பகுதியை விரிவாக ஓதுவது எப்படி என்பது பற்றி பல வகையான செயல்முறைத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் இதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் எதுவுமில்லை. உங்களது திறமைக்கும், வரையறைக்கும் தக்கவாறு நீங்களே ஒரு செயல்முறைத் திட்டத்தை வகுத்துக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் முறையான வழியில் சென்று, கீழ்க்கண்ட வரிசைப்படி பின்பற்றி நடக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

முதலில் குர்ஆன் முழுவதையும் நீங்களாகவே ஓதுங்கள். அடுத்து ஓதுவதற்கான சாதனங்கள் மூலமாகவோ தகுதிவாய்ந்த ஆசிரியர் ஒருவர் மூலமாகவோ குர்ஆனின் பொருள் குறித்துக் கற்றுக்கொள்ளுங்கள். முடிவாக, இந்த இரண்டு வழிமுறைகள்

மூலம் ஓதியவற்றைக் குர்ஆனை முழுவதுமாகப் புரிந்து கொள்ளப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

கட்டம் 1: நீங்களே அறிமுகமாகிக் கொண்டு உங்களது பிரச்னைகளை வரைமுறைப்படுத்திக்கொள்ளுங்கள்.

படி 1: அடிப்படையான முன் நிபந்தனைகளையும் உள் மனப்பங்களிப்பு பற்றியும் நினைவுகூர்ந்துகொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுடன் இருக்கிறான் என்பதையும், நீங்கள் ஓத விரும்புகின்றவற்றைப் புரிந்துகொள்ள அவன் உங்களுக்கு உதவுவான் என்பதையும் உணர்ந்துகொள்ளுங்கள்.

படி 2: பொருளை நன்றாகப் புரிந்துகொள்ள குறைந்தது மூன்று தடவை அல்லது பார்க்காமல் புரிந்துகொள்ள எத்தனை தடவை ஓத வேண்டுமோ அத்தனை தடவை ஓதுங்கள். அதன் பின்னரே நீங்கள் அவற்றை உள்வாங்கிக் கொண்டு விரும்பிய போதெல்லாம் அது பற்றிச் சிந்தனை செய்திட முடியும்.

விதிமுறை என்னவென்றால், நீங்கள் மொழிபெயர்ப்பைப் பார்க்குமுன்னரே வார்த்தைகளையும் அவற்றின் பொருளையும் அறிந்துகொள்ள வேண்டும்.

படி 3: உள்ளடக்கப் பகுதியை ஓதாமலேயே, நீங்கள் காணுகின்ற அனைத்து முக்கியக் கருத்துகளையும் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். பின்னர் இவற்றை உள்ளடக்கப் பகுதியுடன் சரிபார்த்துக் கொண்டு ஓதுங்கள்.

படி 4: நீங்கள் கண்டுகொண்ட மையக் கருத்து ஏதேனும் ஒன்றிருந்தால் அதனைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

படி 5: ஒரே ஒரு செய்தியையோ செய்திகளின் தொகுப்பையோ அறிவிப்பதாக நீங்கள் கருதும் பத்திகளைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.

படி 6: பொருளைப் புரிந்துகொள்ளும் மையப் புள்ளியாக நீங்கள் கருதுகின்ற அனைத்து வார்த்தைகளையும் வசனங்களை யும் அடிக்கோடிடுங்கள்.

படி 7: மேலே விளக்கியுள்ளபடி கேள்விகளை எழுப்பி அவற்றைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

கட்டம் 2: என்ன ஓதினீர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்களாகவே கேள்விகளுக்குப் பதிலளிக்க முயற்சி செய்யுங்கள். அடுத்த பகுதியில் சொல்லப்படவிருக்கின்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செய்திகளின் பொருளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

படி 8: முக்கியமான வார்த்தைகளின் பொருள் என்ன என்பதைக் கண்டறியுங்கள்.

படி 9: ஒவ்வொரு சொற்றொடரின் அல்லது அறிவிப்பின் பொருளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

படி 10: அவை எப்படி ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்பதையும் ஏன் ஒன்று மற்றொன்றுக்கு முன்பாகவோ பின்பாகவோ வந்துள்ளது என்பதையும், அவற்றுக்கிடையிலான ஒருங்கிணைப்பும் தொடர்ச்சியும் என்ன என்பது பற்றியும் சிந்தியுங்கள்.

படி 11: குறிப்பிட்ட பகுதி எந்தச் சூழலில் அருளப்பட்டது என்பது பற்றியும், அத்தியாயங்கள் அருளப்பட்டதன் விரிவான சூழ்நிலை, ஒட்டுமொத்தக் குர்ஆன் அருளப்பட்ட சூழ்நிலை இவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு பொருளைப் புரிந்துகொள்ள முயல வேண்டும்.

படி 12: அதனுடைய பல்வேறு செய்திகளும் போதனைகளும் என்ன என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.

படி 13: அவை எனக்கு என்ன சொல்கின்றன? நம்முடைய காலத்திற்கு என்ன சொல்கின்றன என்று கேள்வி எழுப்புங்கள்.

படி 14: உம்மத்துகளும் மனித சமுதாயமும் அதற்கு எப்படி பதில் கூற வேண்டும் என்பது பற்றிச் சிந்தனை செய்யுங்கள்.

கட்டம் 3: நீங்கள் ஓதுவதற்குப் பயன்படுத்துகின்ற சாதனங்கள் மூலமாகவோ உங்களது ஆசிரியர் மூலமாகவோ

கட்டம் 2இல் குறிப்பிட்டுள்ள நிலைகளின் படி (8 - 14) ஓதி, அதன் பொருளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் புரிந்துகொண்ட விஷயங்களை மீண்டும் சரி பாருங்கள்; திருந்துங்கள்; மாற்றுங்கள்; விரிவாக்குங்கள், உறுதிப் படுத்துங்கள் அல்லது நிராகரியுங்கள்.

கட்டம் 4: இவ்வாறு நீங்கள் புரிந்துகொண்டவற்றை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். அல்லது உங்களது இதயத்திலும், உள்ளத்திலும் அதனைப் பாதுகாத்து வைத்துக்கொள்ளுங்கள்.

இன்னும் என்னென்ன கேள்விகள் உள்ளன என்பதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் புரிந்துகொண்டதாகக் கருதும் எந்த ஒரு விஷயத்தையும் இறுதியானதாகவோ, முழுமை பெற்றதாகவோ கருதாதீர்கள். நீங்கள் தொடர்ந்து ஓதிவந்தால் இன்னும் புரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களையும் மீண்டும் மீண்டும் ஓத வேண்டியதன் தேவையையும் உணர்ந்துகொள் வீர்கள்.

பொருளைப் புரிந்துகொள்வது எப்படி

குர்ஆனைப் புரிந்துகொள்வதற்காக வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளும் வழிகாட்டுதல்களும் அதிகமாக உள்ளன. அவை பற்றியெல்லாம் விரிவான முறையில் விவாதிக்க வேண்டுமென்றால் அதற்கு ஓர் ஆராய்ச்சி நூலே எழுத வேண்டிய தேவை ஏற்படும். எனினும் குர்ஆனின் பொருளைப் புரிந்துகொள்ள நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கியமான வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பொதுவான விதிமுறைகள்

குர்ஆனை வாழும் வேதமாகப் புரிந்துகொள்வது

ஒன்று: இன்று இறக்கியருளப்பட்டது என்ற உணர்வோடு, குர்ஆனின் ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்துகொள்ளுங்கள். பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முதன் முறையாக அது இறக்கியருளப்பட்டது என்றபோதிலும், இன்றைய நவீன

காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு வாழும் மறையாக அது திகழ்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். அது என்றைக்கும் செல்லுபடியாகும் விதத்திலும், மாற்ற முடியாத விதத்திலும் அமைந்துள்ளது. எனவே இப்போது அது ஒரு மாறுபட்ட செய்தி வழங்காது என்பதே உண்மையாகும். எனவே குர்ஆனின் எந்த ஒரு வசனத்தையும் அது கடந்த காலத்தைக் குறித்திடும் ஒரு பொருளாக எடுத்துக்கொள்ளாதீர்கள். அது அனைத்து உயிரினங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்ற, என்றைக்கும் வாழ்கின்ற இறைவனின் 'வாழும் வார்த்தை' என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இதயம் ஓதுவதில் ஈடுபடுகின்றபோது இந்த உணர்வு உங்களுக்கு அவசியத் தேவையாகும். உங்களது மனமும், புத்தியும் குர்ஆன் அனைத்துக் காலத்திற்கும் வழிகாட்டுகின்ற ஒரு மறை என்ற யதார்த்த உணர்வுடனேயே அதனை ஓதுகின்றபோது இருக்க வேண்டும். இது குர்ஆனின் அனைத்துச் செய்திகளையும் நீங்கள் அறிந்துகொள்ளவும், நீங்கள் வாழ்கின்ற உலகத்தை அது பரப்பிடும் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளவும் உங்களுக்கு உதவும்.

இந்த ஒளியில் (வெளிச்சத்தில்) உங்களது வாழ்வை அமைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். தற்போதையப் பிரச்னைகள், கவலைகள், அனுபவங்கள், அறிவின் தரங்கள், உங்கள் காலத்திய நவீனத் தொழில்நுட்பம் என அனைத்து விஷயங்களுக்கும் நீங்கள் குர்ஆனில் விடை தேட வேண்டும்.

உங்களுக்கான செய்தி எனப் புரிந்துகொள்ளல்

இரண்டு: குர்ஆனின் ஒவ்வொரு செய்தியும் உங்களுக்காகவே, உங்களது சமூகத்திற்காகவே இறைவனால் இறக்கியருளப்பட்டுள்ளது என்று நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும். குர்ஆனின் ஒவ்வொரு உள்ளடக்கப் பகுதியிலுள்ள எந்தப் பாடம் உங்களது தனிப்பட்ட வாழ்க்கைச் சூழ்நிலைக்குப் பொருந்தி வருகின்றது என்று நீங்கள் புரிந்துகொள்ள முயல வேண்டும். இது

உங்களுடைய அகப் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும். குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கு அது உங்களுடைய மனக் கதவுகளை எப்படித் திறக்கும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

குர்ஆனைத் தம்மிடம் கற்றுக்கொள்ள வந்த ஒரு மனிதரிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் 99வது அத்தியாயமான 'அஸ்ஸில்ஸாலைக்' கற்றுக் கொடுத்தார்கள். ''எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அவன் அதனைக் கண்டு கொள்வான், மேலும் எவன் அணுவளவு தீமை புரிந்திருந்தானோ அவனும் அதனைக் கண்டுகொள்வான்''என்ற வவசனங்களை ஓதிக் கொண்டிருக்கும் போது அந்த மனிதர் ''இது எனக்குப் போதும்'' என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டார். இதனைக் கண்ணுற்ற நபிகளார் ''இந்த மனிதர் ஒரு ஃபகீஹ் ஆக திரும்பிச் சென்று விட்டார் (புரிந்து கொண்டவராக)'' என்று குறிப்பிட்டார்கள்.

(அபூதாவூத்)

உண்மையில், உங்களுக்குத் தனிப்பட்ட செய்தி எதுவும் இல்லாத எந்த ஒரு பகுதியும் குர்ஆனில் இல்லை.

ஆனால், அதனை நீங்கள் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இறைவனின் ஒவ்வொரு அம்சமும் அவனுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கிறது. இறப்பிற்குப் பின்னர் வரும் வாழ்க்கைக்காக உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், அவனுடைய அருட்கொடைகளை நாடிப் பெற வேண்டு மென்றும், தீய செயல்களிலிருந்து பாதுகாப்புத் தேட வேண்டு மென்றும் கோருகிறது. அதனுடைய ஒவ்வொரு எழுத்தும் வசனமும் நீங்கள் எப்படி முன்மாதிரியாக வாழ வேண்டுமென் பதையும் எவற்றைப் பின்பற்றக்கூடாது என்பதையும் உங்களுக்குக் கூறுகிறது.

ஒவ்வொரு சட்டப்பூர்வத் தடையிலும், அது உங்களுடைய தற்போதையச் சூழ்நிலைக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றி னாலும் அதிலும் உங்களுக்கு ஒரு செய்தி இருக்கின்றது. மிகவும்

பொதுவான விளக்கங்களுக்கும் குறிப்பிட்ட பொருள் உண்டு. பொதுவான விளக்கங்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் ஆகியன உங்களது வாழ்க்கையில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்களாக உள்ளன.

முழுமையின் ஒரு பகுதியாகப் புரிந்துகொள்ளல்

முழு குர்ஆனும் உள்ளுக்குள் ஒருங்கிணைப்பு கொண்டதாக உள்ளது. அது ஒரே ஒரு தனித்த வெளிப்பாடுதான். அவை எண்ணற்ற வேறுபட்ட முறைகளில் கூறப்பட்டிருந்தாலும் செய்தி ஒன்றேயாகும். அது ஒரே உலகக் கருத்தோட்டமும், ஒரு முழுமையான வழிகாட்டு விதிமுறையும் கொண்ட ஒரு வேத நூலாகும். எனவே அதனுடைய அனைத்துப் பாகங்களும் முழுமையாக ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைப்புக் கொண்டதாக இருக்கின்றது. இது அதனுடைய தெய்வீக ஆசிரியப் பண்பின் ஒரு அடையாளமாகும்.

"அவர்கள் குர்ஆனைப் பற்றிச் சிந்திப்பதில்லையா? இது அல்லாஹ்வை அன்றி வேறொருவரிடமிருந்து வந்திருந்தால் அதிகமான முரண்பாடுகளை இதில் கண்டிருப்பார்கள்."

(திருக்குர்ஆன் 4:82)

இந்தத் தனித்த செய்தியையும், அதன் அடிப்படையையும் நீங்கள் முழுமையாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு, எந்த ஒரு விஷயமாக இருந்தாலும், அது ஒரு தனி வார்த்தையானாலும், வசனமானாலும், பகுதியானாலும், அத்தியாயமானாலும் அது முழு குர்ஆனின் ஒரு பகுதிதான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். முழு குர்ஆனிய அமைப்பிலிருந்து எந்த ஒரு பகுதியையும் தனியே பிரித்துப் பார்க்காதீர்கள். பொருள் திரிந்துவிடும். ஒரே சீராக இருக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் என்ன பொருள் கொண்டிருந்தாலும், அதனைக் குர்ஆனின் ஒட்டுமொத்த சூழ்நிலையுடன் வைத்துச் சரிபாருங்கள்.

தேர்ந்தெடுத்த பகுதிகளை ஓதுகின்றபோது, அவற்றை நன்கு அலசி ஆராய்ந்து ஒவ்வொரு வாக்கியத்தையும் ஏன் ஒவ்வொரு

வார்த்தையையும் தனித்தனியே நன்கு பகுத்துப் பார்த்து அதனைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் தனித்த கருத்தோட்டம் கொண்ட வாக்கியங்களையும் வசனங்களையும் தனியே வைத்திருந்து, அவற்றை ஒட்டுமொத்தக் குர்ஆனின் கருத்தோட்டத்துடன் பாருங்கள். இல்லையெனில், தேர்ந்தெடுத்த பகுதிகளை ஓதுகின்ற முறை உங்களை எதிர்த் திசையில் கொண்டுபோய் நிறுத்திவிடும். மேலும் குர்ஆனுடைய கருத்தின் அடிப்படையில் உங்களுக்கு வழிகாட்டுவதற்குப் பதிலாக, சில குறிப்பிட்ட வசனங்களை நீங்கள் ஏற்கனவே கொண்டுள்ள கருத்துக்கு ஆதரவாகப் பொருள்கொள்ள வழிவகுத்துவிடும்.

மேலும் நீங்கள் முழு குர்ஆனையும் ஓதி வர வேண்டும். உங்களது காலத்திற்கும் பிரச்னைகளுக்கும் பொருந்தக்கூடிய பொருளைக் கண்டறிய வேண்டும். இல்லையெனில், குர்ஆனின் ஒளியில் நுட்பமாக அவற்றை மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக, அதனை ஒரு சமகாலச் சிந்தனையாகக் கருதக்கூடிய மிகப் பெரிய தவறைச் செய்தவராகிவிடுவீர்கள்.

முன்னரே கூறியுள்ளபடி, பொருள் அடக்கப் பட்டியலைப் பார்த்துக் குர்ஆனை ஓதுவது விரும்பத்தக்கதல்ல. உண்மையில் குர்ஆனைப் பல தடவைகளில் முழுமையாக ஓதி அதனுடைய ஒட்டுமொத்த விதிமுறைகளை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். பொருளடக்கப் பட்டியலைப் பார்த்துச் சில குறிப்பிட்ட வசனங்களையும் அத்தியாயங்களையும் ஓதுவது பலன்தராது. நீங்கள் ஓதுகின்றபோது தேவைப்பட்டால் மட்டுமே, பொருளடக்கப் பட்டியலைப் பயன்படுத்துங்கள்.

இணக்கமான ஒன்றுபட்ட உள்ளடக்கப்பகுதி

குர்ஆன் மிக இணக்கமான முறையில், மிக உயர்ந்த தரத்தில் ஒருங்கமைக்கப்பட்ட ஒரு நூலாகத் திகழ்கிறது. ஒவ்வொரு வசனமும் இன்னொரு வசனத்துடன், ஒவ்வொரு அத்தியாயமும் இன்னொரு அத்தியாயத்துடன், ஒவ்வொரு பாகமும் இன்னொரு பாகத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றன. வெளிப்படையாகக் கருத்து மாறுபாடுகள் இருப்பதுபோல் தோன்றினாலும் அதனூடே ஓர் ஒன்றுபடுத்தும் கயிறும் இருக்கின்றது.

எனவேதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த இடத்தில் எந்த வசனத்தை வைத்திட வேண்டுமென்று குர்ஆனைத் தொகுத்தவர்களிடம் ஆலோசனை கூறினார்கள்.

குர்ஆனின் இணக்கமான ஒருங்கிணைப்பை முதல் முயற்சியில் நீங்கள் கண்டுகொள்ள முடியாவிட்டாலும், அல்லது அதனை அறிந்துகொள்வதற்கு அதிக கால அவகாசம் தேவைப் பட்டாலும்கூட நீங்கள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டால், அதனைக் கண்டுணர்ந்து கொள்வீர்கள். இந்த முறைக்கு உட்பட்டுப் புரிந்துகொள்ளும்போதுதான், அதன் ஒவ்வொரு பகுதியின் முழுப் பொருளும் உங்களுக்குத் தெரியவரும்.

முழுமையாக மனநிலையில் அணுகுதல்

ஐந்து: நீங்கள் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு குர்ஆனை ஓதி அதனைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். இதயமும், உள்ளமும், உணர்வும், புத்தியும் உங்களுக்குள் ஒன்றிணைந்து காணப்படுகின்றன. அறிவுப்பூர்வமான முறையில் திறந்து பார்த்திட குர்ஆன் ஒரு சிப்பமல்ல அல்லது பரவசமான முறையில் உணர்ந்திட அது ஒன்றும் அழகு சாதனப் பொருளல்ல. குர்ஆனைப் பிளவுபட்ட மனநிலையில் அணுகாதீர்கள். அதனை ஓதுகின்றபோது புத்தியையும் உணர்வையும் பின்னால் விட்டுவிடாதீர்கள். இரண்டும் இணைந்தே வரட்டும்.

குர்ஆன் உங்களுக்கு என்ன கூறுகின்றது என்பதைப் புரிதல்

ஆறு: நீங்கள் குர்ஆனிடம் என்ன கூற வருகிறீர்கள் என்பதல்ல. குர்ஆன் உங்களுக்கு என்ன கூற வருகிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களது கருத்துகளுக்கு ஆதரவாகவோ, அதனை உறுதிப்படுத்தவோ உங்களுடைய நிலைப்பாட்டை நிருபிக்கவோ ஒருபோதும் குர்ஆனின் பக்கம் செல்லாதீர்கள். நீங்கள் திறந்த மனத்துடன் அதனை அணுக வேண்டும். இறைவனின் குரலைக் கேட்கவும் அதற்குக் கீழ்படியவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

ஒருமித்த கருத்துடன் இருத்தல்

ஏழு: குர்ஆனைப் புரிந்துகொள்ளும் முதல் மனிதர் நீங்களல்ல. உங்களுக்கு முன்னால் பலர் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வந்துள்ளனர். அதன் செழுமையான மரபைத் தொகுத்துத் தந்துள்ளனர். அவர்களை நீங்கள் புறக்கணிக்க முடியாது. குர்ஆனை இதுவரை வேறு யாருமே அணுகவில்லை என்ற எண்ணத்துடன் நீங்கள் அணுகக் கூடாது. அல்லது கடந்த காலங்களில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களைச் சுற்றி நீங்கள் உங்கள் வழிகளை அமைத்துக் கொள்ளக்கூடாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அளித்திட்ட விளக்கங்களுக்கோ, நடைமுறை களுக்கோ உம்மத்துகளிடையே நிலவி வருகின்ற ஒருமித்த கருத்துகளுக்கோ முரண்படும் வகையில் நீங்கள் குர்ஆனுக்குப் பொருள் கொண்டால் அது செல்லுபடியாகாது. வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வரும் செழுமையான மரபுகளுக்குப் பெரிதும் முரண்படும் வகையில் எடுக்கப்படும் புதிய முடிவுகள் வலுவான ஆய்வுகளின் அடிப்படையிலேயே எடுக்கப்பட வேண்டும்.

குர்ஆன் மட்டுமே இணையற்ற நெறிமுறைகளை வழங்குகிறது எனப் புரிதல்!

எட்டு: குர்ஆன் பிற நூல்களைப் போன்றதல்ல. அது அனைத்து வகைகளிலும் இணையற்றது. அதற்கெனச் சொந்த மொழியும், மொழிநடையும், அணி இலக்கணமும், இனிமையும், தர்க்க நியாயமும், வாதத்திறனும் அனைத்திற்கும் மேலாக ஓர் இணையற்ற அணுகுமுறையும் நோக்கமும் இருக்கின்றன. குர்ஆனை விட்டு விலகி நின்றுகொண்டு மனித அளவீடு களையும் விதிமுறைகளையும் கொண்டு அதனை மதிப்பீடு செய்வது எந்தவிதப் பலனையும் தராது.

அதன் ஈடு இணையற்ற நோக்கம் என்னவென்றால், ஒவ்வொரு மனிதனையும் வெகுவாக மாற்றி அவனை முற்றிலும் இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதேயாகும். அனைத்து விஷயங்களும் இந்தக் குறிக்கோளை நோக்கியே உள்ளன. இந்தக் குறிக்கோள்களின்படியே அவை அறிவிக்கப்

பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. இதற்குச் சில முக்கியமான தாத்பர்யங்கள் உள்ளன.

முதலாவதாக, அதனுடைய பொருள் என்ற கடலுக்கு ஆழமோ, கரையோ இல்லாதபோதிலும், அது உண்மையைத் தேடும் ஒரு சாதாரண நம்பிக்கையாளருக்கு அவர் சரியான வழியில் உண்மையான உணர்வுடன் அணுகும்போதெல்லாம், எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வழிகாட்டுகின்றது.

இரண்டாவதாக, ஒரு சாதாரண மனிதன் புரிந்துகொள்ளத்தக்க அளவில் அதன் மொழிநடை அமைந்துள்ளது. அதன் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் உரையாடல்களின்போது பயன்படுத்தப்படுகின்ற பொதுவான பேச்சு வழக்கிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. அதில் புதிய அல்லது புரியாத வார்த்தைகள் இல்லை. அல்லது தொழில்நுட்பம், தத்துவம், அறிவியல், தர்க்கவியல் போன்ற கல்வி சார்ந்த மொழிநடையையும் அது கொண்டிருக்கவில்லை. ஆயினும், ஒவ்வொரு நாளும் புழக்கத்தில் இருந்து வருகின்ற பழைய வார்த்தைகளுக்கு அது புதிய பொருளை அளிக்கிறது.

மூன்றாவதாக, இது ஒரு வரலாற்றுப் புத்தகமோ, அறிவியல் புத்தகமோ தத்துவப் புத்தகமோ தர்க்க சாஸ்திரப் புத்தகமோ அல்ல. அது அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வேத மறையாகும். மனித சமூகத்திற்கு வழிகாட்டவே அது வந்துள்ளது. எனவே குர்ஆனை சமகால மனித அறிவை உறுதிப்படுத்துகின்ற ஒரு நூலாக ஆக்கி விடாதீர்கள். அல்லது அந்த அறிவு குர்ஆனைப் புரிந்துகொள்ளப் போதுமானது என்றும் கருதிவிடாதீர்கள். அதனை அறிந்துகொள்ளும் சக்தியை அதிகரிப்பதற்கான உதவியை அதனிடமிருந்து ஒருவர் எப்போதும் பெறலாம்.

நான்காவதாக, குர்ஆன் எடுத்துக் கூறுகின்ற முறையானது, ஒரு மனிதர் ஒவ்வொரு நாளும் இயற்கையுடன், வரலாற்றுடன், தன்னுடன் கொண்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் அமைந்ததாகும். அது தன்னைக் கேட்கின்றவர் அங்கீகரிக்கின்ற அவரது உலகத்தில், அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்ற அவரது

இருப்பிடத்தில் அவரைச் சந்திப்பதில் இணையற்றதாக விளங்குகிறது. அவரது இதயத்தையும், உள்ளத்தையும் இப்படித்தான் அது வசப்படுத்தி மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

குர்ஆனின் வழியில் குர்ஆனைப் புரிந்துகொள்ளல்

ஒன்பது: குர்ஆனுக்கு மிகச் சிறந்த விளக்கவுரை குர்ஆனேயாகும். அது தனது வார்த்தைகளையும், வசனங்களையும் பல இடங்களில் திரும்பத் திரும்பக் கூறுகிறது. ஆனால் தேவையின்றி திரும்பத் திரும்பக் கூறப்படவில்லை. ஒரு வார்த்தையையோ ஒரு வசனத்தையோ திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அது பொருளின் மீது (அர்த்தத்தின்மீது) புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது; அல்லது ஒரு புதிய அம்சத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது.

ஆகையால் ஏதாவது ஒரு வார்த்தையின் அல்லது வசனத்தின் அல்லது பாகத்தின் பொருளைப் புரிந்துகொள்ள குர்ஆனையே பாருங்கள். சான்றாக ரப், இலாஹி, தீன், இபாதா, கு்பர், ஈமான், திக்ர் போன்ற முக்கிய வார்த்தைகளைக் குர்ஆன் பல்வேறு இடங்களில் எப்படிப் பயன்படுத்தியுள்ளது என்பதை அதனை ஓதும்போது நீங்கள் நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஹதீஸுடனும் சீறாவுடனும் புரிந்துகொள்ளல்

பத்து: குர்ஆனை விளக்கிச் சொல்வதே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முக்கியக் கடமைகளில் ஒன்றாக இருந்தது. இதனை தமது வார்த்தைகள் மூலமாகவும், அதன்படி நடந்துகொண்டும் நபிகளார் வழிகாட்டினார்கள். எனவே முழு ஹதீஸ் தொகுப்புகளும் சீறா தொகுப்புகளும் குர்ஆனைப் புரிந்து கொள்ளப் பயன்படும் மிகச் சிறந்த வழிமுறைகளாகும். விளக்கவுரை கொண்ட ஹதீஸ்கள் மட்டுமல்ல, அனைத்து ஹதீஸ்களுமே இதற்கு உதவியாக உள்ளன. எடுத்துக்காட்டாக, ஈமான், ஜிஹாத், தவ்பா போன்ற கருத்துகளைக் கொண்ட ஹதீஸ்கள். அதுபோன்ற கருத்துகளை நீங்கள் குர்ஆனில் காண்கின்றபோது இந்த ஹதீஸ்கள் உங்களுக்கு உதவியாக இருக்கின்றன.

மொழி

பதினொன்று: மொழியே குர்ஆனுடைய முதல் திறவுகோலாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கின்றபோது மொழி புரிந்துகொள்ள மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கின்றது. மொழியே, குர்ஆனைத் தெளிவுமிக்கதாகவும், உயிரோட்டமிக்கதாகவும், புரியத் தக்கதாகவும் வைத்துள்ளது. குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ள சில அரபு வார்த்தைகளைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும்.

முதலாவதாக, குர்ஆனின் நடை, பேச்சுமொழியில் அமைந்துள்ளது. எழுத்து நடையில் அல்ல. அதன் ஓர் உரையில் சில செய்திகள் சொல்லாமல் விடுபட்டுப் போயிருக்கலாம். ஆனால் அதனை முதன்முதலில் கேட்டவர்களுக்கு அதனைத் தெரிந்துகொள்வதில் எந்தவிதமான சிரமமும் இருக்கவில்லை. இது அதனுடைய செயல் திறனையும் சக்தியையும் அதிகரிக்கிறது. அதனைக் கேட்பவர்கள், கூறுபவர்களிடம் தொடர்ந்து கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டு அதன் வார்த்தைகளின் பொருளையும், சூழ்நிலைகளையும் அறிந்துகொள்கிறார்கள். மிக அதிகமான விளக்கங்கள் கொண்ட உரை, அதனை உணர்ச்சியற்றதாக்கி விடுகின்றது. காலத்தைக் குறிக்கும் வினைச் சொற்களிலும் திடீர் மாற்றங்கள் காணப்படுகின்றன. அவை உள்ளடக்கப் பகுதிக்கு மெருகூட்டுகின்றன. இந்த மாற்றங்களை நீங்கள் உன்னிப்பாகக் கவனித்து யார் யாருக்கு இவை சொல்லப் பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். திடீரென்று சில தடங்கல்களும் ஏற்படலாம். அவற்றை நீங்கள் அடையாளம் காண வேண்டும்.

இரண்டாவதாக, அரபு மொழி சொற் கருக்கமும், பொருளாழமும், தொக்கி நிற்கும் சொற்றொடர்களும் கொண்ட ஒரு மொழியாகும். அது அடிக்கடி இணைப்புச் சொற்களையோ முற்று வினையில்லாத சொற்றொடர்களையோ பயன்படுத்துவதில்லை. எனவே அதில் பலபொருள்படும் வார்த்தைகளும், விடுதல்களும், மறைவான வார்த்தைகளும், பதிலி வார்த்தைகளும் (போன்ற பல அம்சங்கள்) காணப்படுவதால், அவை பற்றி கவனமாக

இருக்க வேண்டும். அவற்றைத் தஃப்ஸீர் (விளக்கவுரை) மூலமாகவோ ஆசிரியர்கள் மூலமாகவோதான் கற்றிட முடியும்.

மூன்றாவதாக, வார்த்தைகளின் நேரடிப் பொருளையும் மூலப் பகுதியின் நேரடிப் பொருளையும் தனித்துப் பார்ப்பது, அவற்றை முழுமையாகப் புரிந்துகொள்ளப் போதுமானதாக இருக்காது. பொதுவான உலகக் கருத்து பற்றிய கண்ணோட்டமும், குர்ஆனின் இலக்கிய நடை, மொழி மரபு பற்றிய புரிதலும் உங்களுக்கு அவசியம் இருக்க வேண்டும். குர்ஆன் அருளப் பட்ட காலத்தைச் சார்ந்த அரபு இலக்கியங்களுடனான உங்களுடைய பரிச்சயம் இதில் உங்களுக்குப் பெரிதும் துணை நிற்கும்.

வழிகாட்டுதலின் செயல்முறைகள்

மேற்கூறப்பட்டுள்ள பொதுவான விதிமுறைகளுக்குள், மேலும் சில செயல்முறைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

வார்த்தைகளை ஓதுதல்

ஒன்று: மூலப் பகுதியைப் புரிந்துகொள்ள மிகவும் அவசியம் என நீங்கள் கருதுகின்ற வார்த்தைகளின் பொருளை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். உங்களிடமுள்ள மொழிபெயர்ப்பும், சிறிய விளக்கவுரையும் தொடக்க நிலையில் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். அகராதியையும் பார்த்துக் கொள்ளுங்கள். ஆனால் அது மட்டும் போதும் என்று கருதி விடாதீர்கள். வார்த்தையின் சந்தர்ப்ப சூழ்நிலையும் முழு குர்ஆனும் அதனுடைய உலகக் கண்ணோட்டமே உங்களது நல்ல இறுதி வழிகாட்டியாக இருக்கும்.

இரண்டு: வார்த்தைகளின் நேரடியான பொருளை நீங்கள் ஒருமுறை புரிந்துகொண்டு விட்டீர்களானால், அந்தப் பகுதியை உள்ளடக்கப் பகுதியின் சந்தர்ப்ப சூழ்நிலையோடு பொருத்திப் பார்த்து, அது என்ன பொருளைத் தருகிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அதற்கு முன்னும் பின்னும் வருகின்ற பகுதிகளையும் தேவைப்படின் முழு அத்தியாயத்தையும் படியுங்கள்.

வரலாற்றுப் பின்னணி

ஒன்று: தேவையான, பொருத்தமான வரலாற்றுச் செய்திகளை உங்களால் முடிந்த அளவிற்கு அதிகமாகச் சேகரித்துக் கொள்ளுங்கள். ஆனால், அதனுடைய மெய்த் தன்மையையும் உறுதி செய்துகொள்ளுங்கள். இது தொடர்பாக இறைவசனங்கள் அருளப்பட்டதன் காரணத்தைக் கூறுகின்ற ஹதீஸ்களை நீங்கள் படித்திருக்கக்கூடும். அவை உங்களுக்கு அரிய தகவல்களைத் தரலாம். ஆனால் இரண்டு விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

முதலாவதாக, அத்தகைய விளக்கங்கள் இறைவசனங்கள் அருளப்பட்டபோது நிலவிய வரலாற்று நிகழ்வுகளை அப்படியே மிகச் சரியாகச் சொல்லிவிடாது. மாறாக, எந்தச் சூழ்நிலைக்கு அது பொருத்தமானது, பின்பற்றத்தக்கது என்பதைச் சொல்லிவிடும்.

இரண்டாவதாக, இறைவசனங்கள் அருளப்பட்ட தருணம் பற்றிய உள்ளடக்கப் பகுதியின் சான்று மிக முக்கியமானதாகும். வரலாற்றுச் செய்தியை ஏற்றுக்கொள்ளும்போது அதனைத் தள்ளிவிடக் கூடாது.

மூன்றாவதாக, வரலாற்றுச் செய்தி, உங்களது சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நீங்கள் உள்ளடக்கப் பகுதியைப் புரிந்துகொள்வதற்குத் தடையாக இருக்கக்கூடாது.

அசல் பொருள்

நான்கு: நேரடியான பொருளைப் புரிந்துகொண்ட பிறகு, முதன் முதலில் குர்ஆனைக் கேட்டவர்கள் எப்படி அதனைப் புரிந்து வைத்திருந்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிந்த வரை முயற்சி செய்யுங்கள். நேரடியான பொருளை அறிந்து கொள்வது உங்களுக்கு எளிதாக இருக்கலாம். ஆனால், 14 நூற்றாண்டுகளுக்குப் பிறகு, முற்றிலும் ஒரு புதிய நாகரிகச் சூழ்நிலையில் அதன் அசல் பொருளைக் கண்டறிவதென்பது சிரமமான, சிக்கலான ஒரு பணியேயாகும். இந்தச் சிரமங்களைப் பற்றி விவாதிக்க இது இடமில்லை. உங்களை எச்சரிக்கவே இவை கூறப்படுகின்றன.

உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மொழிபெயர்த்தல்

ஐந்து: உங்களது அடுத்த பணி, உங்களுக்குத் தக்க சூழ்நிலையில் குர்ஆனின் உள்ளடக்கப் பகுதியைப் படித்துப் புரிந்துகொள்வதேயாகும். குறிப்பாக, உங்களுக்கு உகந்த சூழ்நிலையில் குர்ஆனை ஓத விரும்பவில்லையென்றால், அதன் அசலான பொருளை உறுதி செய்வதுகூட உங்களுக்குச் சவாலான ஒரு பணியாகவே இருக்கும். மேலும், பொருள் கொள்வதிலுள்ள மிகச் சிக்கலான பிரச்னைகளை விவாதிப்பது சாத்தியமற்றது என்றாலும்கூட அதனை நான் எளிதாக நிராகரித்திட விரும்பவில்லை. ஆனால் நீங்கள் புறக்கணிக்க இயலாத, தவிர்க்க முடியாத பணி இது. அடிப்படையான விதிமுறைகளை அறிந்துகொண்டு, அதனைக் கடைப்பிடித்துக் குர்ஆனைத் திறந்த மனதுடன் ஓதுங்கள். ஆனால் நீங்கள் சிந்திப்பது மட்டும்தான் சரியானது என ஒருபோதும் எண்ணாதீர்கள். அதனை நீங்கள் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

மேலும், சிக்கல் நிறைந்த சட்டம், தார்மிக நெறிமுறைகள் தொடர்பான பிரச்னைகளுக்குப் பதிலாக உங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான செய்திகளில் கவனம் செலுத்துங்கள். நமது சூழ்நிலைக்கு ஏற்ப குர்ஆனின் உண்மையான பொருளையும், கருத்தையும் தெளிவுபடுத்தி வெளிச்சத்திற்குக் கொண்டுவர, சில நேரங்களில் உங்களுக்கு சமகால கலைச் சொல் அகராதியைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். நேரடியான, தெளிவான, அசல் பொருளை அப்படியே அறிந்துகொள்வதற்கு இது பயன்படும். ஆனால், அப்படிப் பொருள்கொள்ளும்போது, வார்த்தைகளின் பொருளில் திரிபு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பாரதூரமான பொருத்தமற்ற பொருள்

ஆறு: சாதாரண மனிதன் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாத பாரதூரமான கதை வடிவமும் மறைமுகப் பொருளும்கொண்ட பகுதிகளைப் பற்றி அதிகம் கவலைப்படாதீர்கள். உங்களுடைய வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற அல்லது குர்ஆனின் முதல்

நம்பிக்கையாளர்களின் வாழ்க்கைக்கும் பொருந்திவராத பொருளை அறிந்திடும் முயற்சியில் ஈடுபட வேண்டாம்.

அறிவு - நுண்ணறிவின் தரம்

ஏழு: உங்களது அறிவிற்கும் நுண்ணறிவிற்கும் தக்க அளவிற்கு குர்ஆனைப் புரிந்துகொள்ளுங்கள். குர்ஆனை முதன் முதலில் கேட்டவர்களின் அறிவின் தரம் பற்றி அறிந்திட முயற்சி செய்யுங்கள். உங்களது சொந்த அறிவைக் கொண்டு குர்ஆனை ஓதி அதற்குப் பொருள்கொள்ளும் வழிதவறிய செயலில் ஈடுபடாதீர்கள்.

தற்போதைய மனித அறிவு

எட்டு: ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த அறிவைக் கொண்டு குர்ஆனைப் புரிந்துகொள்கிறான் என்ற உண்மையை மறந்துவிட வேண்டாம். குர்ஆனை நுட்பமாக மதிப்பீடு செய்வதற்கும், அது எழுப்புகின்ற பிரச்னைகளின் தீர்விற்காக அதனிடமிருந்தே வழிகாட்டுதல்களைப் பெறவும், குர்ஆனை அதனுடைய தற்போதைய மொழிமரபில் புரிந்துகொள்ளவும் இந்த அறிவு உங்களுக்கு அவசியத் தேவையாகும். அனைத்து வழிமுறைகள் மூலமாகவும் குர்ஆனைப் புரிந்துகொள்ள உங்களுடைய அறிவை உதவிக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள். ஆனால், ஒருபோதும் சமகால அறிவை உறுதிப் படுத்துவதற்காக குர்ஆனின் பக்கம் வராதீர்கள். தற்போதைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பற்றியெல்லாம் குர்ஆன் முன்னரே கூறியுள்ளது என்று உரிமை கொண்டாட வேண்டாம். ஏனெனில், இடம்பெயர்ந்து செல்கின்ற மணல் துகள்கள் போன்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். தாலமி, அரிஸ்டாட்டில், பிளேட்டோ ஆகியோரை, ஐன்ஸ்டீன், கோபர்நிகஸ், நெட்ஸ்கி, பெர்க்சன் ஆகியோர் படித்ததைப்போல, குர்ஆனைப் படிப்பது தவறானதாகும்.

நீங்கள் புரிந்துகொள்ள முடியாதவை

நீங்கள் பலமுறை முயன்றும் புரிந்துகொள்ள முடியாத பல

வார்த்தைகளும், வாக்கியங்களும் குர்ஆனில் உள்ளன. அவற்றைப் புரிந்துகொள்ள உங்களுக்குப் போதுமான அறிவு இல்லாமல் போகலாம் அல்லது அவற்றைப் புரிந்துகொள்ள உங்களுக்குச் சிரமமாக இருக்கலாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில், உங்களுடைய சிரமங்களைக் குறித்து வைத்துக்கொண்டு மற்றப் பகுதிகளை ஓதச் சென்றுவிடுங்கள். உங்களை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கும் விஷயங்களில் நேரத்தைச் செலவிட வேண்டாம். ஏனெனில் சில சமயங்களில் இவை உங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டவையாக இருக்கலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை

குர்ஆனைப் புரிந்துகொள்ளவும், உள்வாங்கவும், அதனை அல்லாஹ்விடமிருந்து முதன் முதலாகப் பெற்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு நீங்கள் உங்களால் முடிந்த அளவிற்கு நெருங்கி வர வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை குர்ஆனுக்கு மிகச் சிறந்த விளக்கவுரையாகவும் அதன் செய்திக்கும், பொருளுக்கும் மிகச் சரியான வழிகாட்டியாகவும் இருக்கின்றது. அவர்களின் வாழ்க்கை வாழும் குர்ஆனாகும். வெறுமனே ஓதுவதற்குப் பதிலாக, குர்ஆனை நீங்கள் பார்க்க வேண்டுமென விரும்பினால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பாருங்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியது போல "குர்ஆனே அவர்களின் வாழ்க்கையாக இருந்தது." இப்னு ஜரீர், இப்னு கஸீர், கஷ்ஷாஃப், ராஸி ஆகியோரின் விளக்கவுரைகளைப் படிப்பதைக் காட்டிலும், நபிகளாரின் வாழ்க்கை குர்ஆனைப் புரிந்துகொள்ள உங்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருக்கத்தைப் பெற்றிட நீங்கள் முதலில் அவர்களின் ஹதீஸ்களையும் வாழ்க்கை வரலாற்றையும் உங்களால் முடிந்த அளவிற்குப் படிக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகள் உங்களிடம் இல்லாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. ஆனால், குர்ஆனில் அவர்களது வாழ்க்கையின் மிக நல்ல அம்சங்கள் இருப்பதைக் காண முடியும். இரண்டாவதாக, அவர்களின் வழிமுறையைப்

பேண முயற்சி செய்யுங்கள். அப்படிச் செய்வதன் மூலம் நீங்கள் அவர்களைப் புரிந்துகொள்கிறீர்கள். குர்ஆனைப் புரிந்துகொள் கிறீர்கள். "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாய் இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்." (திருக்குர்ஆன் 3 : 31)

★ ★ ★

CamScanner